# கந்தபுராண

## கலாசாரம்



பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

க. சே———ன்

கொழும்புத்துறை பயிற்சிக்கலாசாலை

யாழ்ப்பாணம்

உ

சிவமயம்

# கந்த புராண கலாசாரம்

பண்டிதமணி

சி. கணபதிப்பிள்ளை

முதற் பதிப்பு: கார்த்திகை 1959.

விலை ரூபா ஒன்று.

பதிப்புரிமை ஆக்கியோனுக்கே உரியது.

அச்சுப் பதிப்பு:
ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

கடந்த முப்பது ஆண்டுகளாய்ச் சமயப் பணியும் தமிழ்ப் பணியும் ஆற்றிய பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் மூன்று நூல்களே புத்தக வடிவில் வெளிவந்தன. நான்காவதாகக் **கந்த புராண கலாசாரம்** என்னும் இந்நூல் வெளிவருகிறது. மற்றைய நூல்களும் விரைவில் புத்தக வடிவில் வெளிவர வேண்டுமென்பதே எங்கள் அபிலாஷை.

**மானிப்பாய்,**
**18-11-59.**

**பதிப்பாளர்.**

# வரலாறு

மகாபாரத யுத்தமும் முடியக் கலியும் உதய மானது. யுத்தத்தில் நல்லவர்களும் மாண்டு மடிந்து போனார்கள். நல்லவர்களில் எஞ்சியிருந்தவர்களுக் கும் யுத்தத்துக்குப் பிறகு இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பு உண்டாய் விட்டது. கலி வளரத் தருமம் வரவரக் குன்றியது. கலி 2500 வரை தருமத்தின் சாயலும் அதன்மேல் 5000 வரை சாயலின் சாயலும் இருந்து வந்தன. இடையில் சரித்திரம் தொடங்கியது.

இமய மலைக் கணவாயின் வழியாக அநாரிய ரான மிலேச்சர்கள் தம்மை ஆரியர்கள் என்று சொல் லிக் கொண்டு பாரத தேசத்தில் நுழைந்தார்கள். 'ஆரியர்' என்பது அறிவு ஒழுக்கங்களால் உயர்ந் தோருக்கு வழங்குவதொரு வார்த்தை.

அநாரியரின் தாக்கத்தால் முனிவர்கள் கண்ட பழைமையான பாரத கலாசாரம் தெற்கு நோக்கி நடக்கத் தொடங்கியது. இறுதியாகப் பாரத கலா சாரம் தெற்கே சற்றே தங்கியிருந்தது என்று சொல் லுவதற்கு ஓரிடம் உண்டானால் அது நமது யாழ்ப் பாணமேயாம். அதற்கு மூலகாரணம்,


"எத்துணைக் காலம் திருப்பித் திருப்பிப் படிக்கி னும் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாது தித்தித் தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக் காகிய கந்த புராணத்துள்ள பதியிலக்கணத் திரு

விருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினால் இவர்கள் (யாழ்ப்பாணத்தவர்கள்) உள்ளத் தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்.'' என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அறுதியிட்டுக் கூறுகின்றார்.

'கந்தபுராண கலாசாரம்' என்னும் இப் புத்தகம் பரமேசுவரக் கல்லூரியில் நடந்த லக்ஷிய ஜயந்தி ஒன்றில் "யாழ்ப்பாணக் கலாசார மூலம் கந்த புராணம்" என்ற தலையங்கத்தில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தின் விரிவு.

இதனை வெளியிட்ட அன்பர்களுக்கு எனது நன்றி உரியதாகுக.

திருநெல்வேலி, சி. கணபதிப்பிள்ளை
யாழ்ப்பாணம்.
18-11-59.



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கந்தபுராணப் பெருமை 1. .... | 1 |
| 2. | கந்தபுராணப் பெருமை 2. .... | 9 |
| 3. | கண்ணூறு .... .... | 16 |
| 4. | வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை | 25 |
| 5. | புராண படனம் .... .... | 33 |
| 6. | பெறுபேறு .... .... | 41 |
| 7. | ஏகாத்மவாதம் .... .... | 50 |
| 8. | சைவசித்தாந்த கலாநிதி செந்திநாதையர் | 59 |
| 9. | செந்திநாதையர் நிறுவிய உண்மை ... | 68 |
| 10. | சூதசங்கிதையில் ஏகாத்மவாதிகளின் விளையாட்டு | 75 |

# பண்டிதமணி எழுதிய நூல்கள்

## வெளிவந்தவை :

1. இலக்கிய வழி.
2, பாரத நவமணிகள்.
3. சைவ நற்சிந்தனைகள்.
4. கந்தபுராண கலாசாரம்.

## தொடர்ந்து வெளிவருவன :

1. இராமயணக் கட்டுரைகள்.
2. அன்பினைந்திணை.
3. சைவ சமயக் கட்டுரைகள்.
4. கந்தபுராணக் கட்டுரைகள்.
5. துறவும் கீதையும்.
6. காரைக்கால் அம்மையார்.
7. தெய்வயானை திருமணம்.
8. கோயில்.
9. திருவருட் பயன் விருத்தியுரை.
10. திருவருட் பயன் சிற்றுரை.

# கந்தபுராணப் பெருமை

## 1

காசிபமுனிவர் தம் பிள்ளைகளாகிய சூரபத்மா சிங்கன் தாரகன் என்னும் மூவரையும் இருத்திப் படிப்பிக்கின்றார்

"சான்றவர் ஆய்ந்திடத் தக்க ஆம்பொருள் மூன்றுள" என்று பாடம் ஆரம்பிக்கின்றது.

"பிள்ளைகளே, இந்த உலகம் இருக்கின்றது உடம்பு இருக்கின்றது; ஏதேதோ முயற்சியும் செய்கிறோம். இந்த உலகத்திலே நாம் அறிந்தது அத்தியற்பம்; அறியாதது அளவில் அடங்காதது.

"ஆகவே, நம்மிடம் அறியாமை குடிகொண்டிருக்கிறது.

"உலகம், உடம்பு, முயற்சி, அறியாமை இவையனைத்துக்கும் பாசம் என்று பெயர். இவற்றோடு கூடி உடம்பை இயக்குகின்ற நமக்குப் பசு என்று பெயர். பசு என்றால் உயிர். உயிர் உடம்பை இயக்குவதுபோல உயிரை மற்றொன்று இயக்குகின்றது. உயிர் ஒன்றை எண்ணிக்கொண்டிருக்கத் திடீரென்று அவ்வெண்ணம் மறைய மற்றொரு எண்ணம் வந்து தோன்றுகிறது, உயிருக்கு அவ்வெண்ணம் எப்படி வருகின்றதென்று தெரியவில்லை. அவ்வெண்ணத்தை வருவிப்பதொன்று இருக்கவேண்டும். அதுதான் உயிராகிய பசுவை இயக்குவது. அதற்குப் பதி

என்று பெயர். எனவே, பதி பசு பாசம் என்று மூன்று பொருள்கள் உண்டு. அவை ஆராய வேண்டிய பொருள்கள். சான்ரோர்கள் அவற்றை ஆராய்கின்ருர்கள்” என்றிங்ஙனம் எடுத்துக்கொண்ட தொடருக்கு விளக்கஞ் செய்கின்ருர் முனிவர்.

பாடம் பிள்ளைகளுக்குத் தாலாட்டாயிருந்தது. மூத்தவனும் இளையவனும் இருந்த இருந்தபடியே நித்திரையாய் விட்டார்கள். சிங்கன் மாத்திரம் உறங்கவில்லை.

ஆயினும், பாடம் மகாகடினம் என்று முனிவருக்குத் தோன்றியது. ஆதலினுலே பாடத்தை மாற்றி ஆத்திசூடியிலே “அறஞ் செய விரும்பு” என்பதைப் படிப்பிக்கலாமா என்று முனிவர் யோசித்தார்.

அறமோ மிகமிக நீளமானது. “ஈறில் நல்லறம்” என்கின்ருர் கம்பர். தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் ஆகிய நான்கையும் அடக்கியது அறம். அறம் என்ருல் புருஷார்த்தம் என்றே சொல்லி விடலாம். ‘சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகுதல்’ தான் மோக்ஷம். மனிதன் பொய்யான பிடிகளை விடும் பொருட்டு, மெய்யான பிடியைப் பிடிக்க வேண்டும். அதுதான் “சார்புணர்ந்து சார்புகெட ஒழுகல்”. அதனையும அறம் என்று சொல்லுகின்ருர் திருவள்ளுவர். “சார்புணர்ந்து சார்புகெட ஒழுகல்” என்ற குறள் அறத்துப்பாலில் உள்ளது. உற்று நோக்கும்போது அறம் மோக்ஷ பரியந்தம் வெகு நீளமானது. நீண்ட அந்த அறமும் அந்தப் பிள்ளைகளுக்

குக் கடினம் என்று முனிவருக்குப் படுகின்றது. அவர் மேலும் யோசித்து,

"தருமம் என்று ஒரு பொருள் உளது" என்று மீண்டு பாடம் ஆரம்பித்தார். அப்பொழுது, "நன்னய மாயவள் நகைத்துக் கூறுவாள்." அந்தப் பிள்ளைகளின் தாய் மாயை; காசிபருக்கு மனைவி. அவள் காசிபர் என்கின்ற ஆசிரியர் படுங்கஷ்டங்களைப் பார்த்துச் சிரித்து, "தருமம் என்று ஒரு பொருள் உளது" என்கின்ற இந்தப் பாடமும் நமது பிள்ளைகளுக்குக் கடினமே என்கிறாள்.

"நன்பெருஞ் செல்வமும் நவையில் கோற்றமும்
இன்பமும் அழிவிலா திருக்கும் ஆயுளும்
மன்பெருஞ் சீர்த்தியும் மறுவில் வாழ்க்கையும்
அன்புடை இனையவர் அடைதல் வேண்டுமால்"

அன்புக்குரிய நமது குழந்தைகள் இந்த உலகத்திலே செல்வம் செல்வாக்கு இவற்றுடன் இனிது வாழவேண்டும்.

"மறைதெரி முனிவநீ வாய்மை ஆகிய
உறுதியை மொழிந்தனை உயர்ந்த வீடுறும்
அறிவுடை முனிவரர்க் கன்றி யாம் அருள்
சிறுவருக்கு இத்திறஞ் செப்பலாகுமோ"

"நீ வேதங்களை உணர்ந்திருக்கின்றாய்; உண்மையைத்தான் சொல்லுகின்றாய். உனது உபதேசம் அறிவு முதிர்ந்த முனிவர்களுக்குத்தான் பொருத்தம்; நமது சிறுவர்களுக்குச் சிறிதும் பொருந்தாது" என்றிவ்வாறு மறுத்துரைக்கின்றாள் தாயாகிய

மாயை. மாயைக்கு 'விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை' என்று திருவருட் பயனிலே ஒரு பெயர் வழங்குகின்றது. இந்த உடம்பும் உலகமும் மாயையிலிருந்து வந்தவை. அவை நமது அறியாமைக்கும் முயற்சிக்கும் உரிய அளவில் விளக்கந் தருபவை. சூரபத்மா முதலியவர்களின் கர்மமும் அறியாமையும் அவர்களுக்குத் தருமத்தை அறிய முடியாமல் தடைசெய்து நிற்கின்றன. மாயை ஆகிய விளக்கினாலே அந்தத் தடையை நீக்க முடியவில்லை. அதனாலேதான், 'விடிவாம் அளவும் விளக்கனைய மாயை' காசிபரை நோக்கி, "நாம் அருள் சிறுவருக்கு இத்திறஞ் செப்பல் ஆகுமோ" என்றாள். அவ்வளவில் முனிவர்பிரான் தமது ஆசிரிய உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்தார்.

அதன்மேல் சுக்கிராசாரியர் சூரனாதிய குழந்தைகளுக்குக் குரவராக நியோகிக்கப்பட்டார்.

> "தருமஞ் செய்க, தவறுள பாவமாம்
> கருமஞ் செய்யற்க என்பர் கருத்திலார்;
> இருமை தன்னையும் யாவர் செய்தாலும்
> மேல் வருவதொன்றிலை"

"புண்ணியம் ஆம்; பாவம் போம்" புண்ணியம் செய்யத்தக்கது, பாவம் செய்யத் தகாதது என்பதெல்லாம் வீண் கதை. எதனையும் எவரும் செய்யலாம். அதனால் அவருக்கு வரக்கடவது ஒன்றும் இல்லை என்று சுக்கிரனது உபதேசம் ஆரம்பிக்கின்றது. பிள்ளைகள் நன்கு இரசிக்கின்றார்கள்.

"பாசம் என்றும் பசுவென்றும் மேதகும்
ஈசன் என்றும் இசைப்பர்; தலையெனப்
பேசல் மித்தை; பிறிதிலை; ஆவியுந்
தேசுமேவு சிவனும் ஒன்றுகுமே"

பதி பசு பாசம் என்று மூன்று பொருள் இல்லை. உள்ள பொருள் ஒன்றே. அதுவே பிரமம்.

"இடங்கோள் மாயையின் யாக்கைகள் ஆயின
அடங்கவும் நல்கி அன்னவற் றூடுதான்
சடங்கோள் வானிற் கலந்து மற்றவ்வுடல்
மடங்குமெல்லையில் மன்னுவன் தோன்மைபோல்"

பிரமம் மாயையினுல் உடம்புகளை உண்டாக்கி, அவற்றுட் புகுந்து விளையாடல் செய்யும். உடம்பு அழிந்த காலத்தில் பிரயம் தான் தானேயாய் நிற்கும். குடத்துட் புகுந்த ஆகாயம் குடம் உடைந்த பிறகு, எவ்வாறு தான் தானேயாய் நிற்கின்றதோ, அவ்வாறே பிரமமும் நிற்கும்.

ஆதலினுலே, சூரபத்மாவே,

"உற்றதோர் மேன்மை நாடி உன்னை
நீ பிரமம்என்றே தேற்றெனத் தேளிதி"

உடம்புள் நிற்கும் நீ பிரமம். நீ ஒன்று செய்தால் கண்டிக்கவோ தண்டிக்கவோ இரண்டாவது பிரமம் இல்லை. ஆகையினுலே,

"கோலையோடு களவு காமம் குறித்திடுவஞ்ச மெல்லாம்
நிலையெனப் புரிதி"

இவற்றைச் செய்யாயாயின், அது உனக்கு நட்டம். அன்றி, உனக்கு எவரும் அஞ்சமாட்டார்.

இவை சுக்கிரன் செய்த உபதேசம். இந்த உப தேசத்துக்கு "மிண்டிய மாயா வாதம் என்னும் சண்ட மாருதம்" என்று பெயர்.

* * *

அசுரர்களுக்குக் குலகுரு சுக்கிராசாரியர். அது போலத் தேவர்களுக்குக் குலகுரு வியாழ பகவான். அவருடைய உபதேசமும் அறியத்தக்கது. அவர் ஒரு முறை இந்திரனுக்கு உபதேசித்தார். சூர பத்மா முதலிய அசுரர்கள் அடியோடு அழிந்து போனார்கள். இந்திரன் பழையபடி சுவர்க்கத்தில் அரசு வீற்றிருக்கிறான். அப்படி யிருக்கும் பொழுது அசுரர்கள் செய்த பழைய கொடுமைகளை ஒருநாள் நினைத்தான். நினைத்ததும் இனியும் அசுரர்கள் வந்து வருத்த நேர்ந்தாலோ என்று அவனுக்குப் பயம் உண்டானது. பயத்தினாலே இந்திராணியை யும இந்திரச் செல்வத்தையும் வெறுக்கின்றான்; துறவு பூணுகின்றான். ஏதோ ஒரு உண்மையைக் கண்டு அதனைப் பற்றிக் கொண்டதனால் இந்தத் துறவு இந்திரனுக்கு வந்த தன்று. பயத்தினாலே வந்த துறவுதான் இந்தத் துறவு. பயம் போகிற காலம் வந்தால் இப்படிப்பட்ட துறவும் போய்விடும். அப்படியான பொய்த் துறவைத் தவிர்ப்பதே தர்மம். அதனாலே,

"ஆண்டோர் பேரின்பம் உண்டேன்பர், அதனை
ஆர் அறிவார்

"நன்னல மாதரை நணுகும் இன்பமே
உன்னரும் முத்தி"

என்று தேவகுரு தேவேந்திரனுக்குப் போதித்து அவனுடைய பொய்த்துறவைத் துறக்க வழிசெய்கின்ருர். அதனல் இந்திரன் துறக்க போகத்தில் முழுகுகின்ருன். இதற்கு "உலோகாயதம் எனும் ஒண்டிறற் பாம்பின் கலாபேதத்த கடுவிடம்" என்று பெயர்.

இது பின்பற்றக் கூடாததொரு நெறியாயினும் இந்திரனுடைய பற்றுக்களை நெறிப் படுத்துதற்கு ஒரு உபாயமாக உபதேசிக்கப்பட்டது. இந்திரனது நிலையை நோக்குமிடத்து இந்த உபதேசம் அவனுக்கு ஏற்ற தர்மமாயது.

"ஓடி மீள்கென ஆள்தல் பார்த்திருப்பது" குரவர்களின் மரபு. பற்றுக்களை அடக்கமுடியாது. "அடக்கடக்கென்பர் அறிவிலார்." பற்றுக்கள் தாமே அடங்க வேண்டும். அப்படி அடங்குதற்கு வழி செய்து வைப்பதுவே தர்மம். சூரபத்மா நூற்றெட்டு யுகம் தன் பற்றுக்களின் வழி நடந்தான். போர் மூண்டது. ஒரு நாள் தன் சுற்றத்தவர்களையும் படைகளையும் இழந்து தனித்து நின்ருன். அப்பொழுது, 'விடிவாம் அளவும் விளக்கனைய மாயை' ஆகிய தாய் ஓடிவந்து, "மகனே, நீ வெல்ல மாட்டாய்; சுப்பிரமணிய சுவாமியை எதிர்ப்பது தர்மம் அன்று" என்று போதித்தாள். அவன் கேட்கவில்லை. "தருமம் என்று ஒருபொருள் உளது" என்ற உபதேசத்தை நூற்றெட்டு யுகம் கழிந்தும் கொள்ளத் தக்க நிலை அவனுக்கு வரவில்லை. அப்பால் சுப்பிரமணிய சுவாமி பிரசந்நமானுர். அருட் கிரணத்தில் ஒரு துளி அவன்மீது சிந்தியது. அறியாமைத் திரை சிறிதே விலகியது.

"கோலமா மஞ்ஞைதன்னிற் குலவிய குமரன்றன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணர்ந்திலேன்யான்
மாலயன் றனக்கும்ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய்நின்ற மூர்த்திஇம் மூர்த்தியன்றே"

என்கின்றான் சூரபத்மா. "ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற தொடரின் பொருள் அப்பொழுதுதான் அவனுக்கு விளங்குகின்றது. இனிச் சூரபத்மா உயர்தர உபதேசங்களுக்கு உரியவன்.

குரவர் இருவரின் உபதேசங்களும் சந்தர்ப்பத்தையும் பாத்திரங்களையும் நோக்கும்போது தர்மங்கள். அவ்விரண்டையும் விலகி நோக்கும் போது அவ்வுபதேசங்கள் பொல்லாத புறப்புறச் சமயங்கள்.

# கந்தபுராணப் பெருமை

## 2

திருக்கைலாசத்திலே கல்லாலவிருட்ச நீழலிலே ஒரு மௌனுேபதேசம் நடக்கின்றது.

ஜநகர் முதலிய நான்கு முனிவர்கள் 'வேதக் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரித்த போதக் காட்சிக்கும்' எட்டாத உண்மையை உணர்தற்கு முயன்று கொண்டிருக்கின்ருர்கள்.

வேதக் காட்சி பாசஞானம். வேதங்களாலும் சாஸ்திரங்களாலும் உலக பந்தங்களின் இயல்பை அறிதற்கு உபகாரமான ஞானம் பாசஞானம். போதக் காட்சி பசுஞானம். உடலில் வேருக உயிரைக் காணுதற்கு உபகாரமான ஞானம் பசுஞானம். இவ்விரு வகை ஞானங்களுக்கும் அப்பாற்பட்ட ஞானம் பதிஞானம், அவனருளாலே தான் அவன் தாளாகிய உண்மையை உணரலாம் சூரிய கிரணத்தின் உதவியினுலேதான் சூரியனைக் காணமுடியும்; அதுபோல.

அசுர தேவ குரவர்களின் உபதேசங்களுக்கும் கல்லால விருட்ச உபதேசத்துக்கும் இடையில் எத்தனையோ உபதேசங்கள் கந்தபுராணத்தில் வருகின்றன. பிரமா தக்கனுக்கு உபதேசிக்கின்ருர். தக்கன் பிரம்ம விசாரஞ் செய்கின்ருன். "படைத்தல் காத்தல் அழித்தல்களாகிய முத்தொழில்களில் படைத்தற்றொழில்தானே தலைசிறந்தது. அடுத்தபடியில் காத்

தற் றெழிலைச் சொல்லலாம். அழித்தற் றெழிலில் என்ன மகத்துவம் இருக்கின்றது? வேதங்கள் அழித்தலைச் செய்கின்ற உருத்திரனைப் புகழ்ந்து துதிப்பதன் கருத்து என்ன?" என்று விசாரிக்கின் றான் தக்கன்.

"கயிற்றைக் கண்டவழிப் பொய்த்தோற்றமாகிய பாம்பு எவ்வாறு இல்லை ஆகின்றதோ அவ்வாறே காணப்பட்ட இந்த உலகம் எந்த உருத்திரனைக்கண்ட வழிச் சூனியம் ஆகின்றதோ அந்த உருத்திரனே தலைமையோன்; அவன் வழி நின்று நான் படைக் கின்றேன்; அவ்வாறே விஷ்ணு காக்கின்றார். நம் மைக் கண்டவழியும் ஒரு சில தத்துவங்கள் ஒடுங் கலாம். நட்சத்திரங்கள் சிறிது இருளை நீக்க வில் லையா? முழு இருளையும் நீக்குகின்ற சூரியனைப் போலத் தத்துவங்கள் முழுவதையும் ஒடுக்குகின்ற வன் எவனோ அவனே உருத்திரன். அதனாலே தான் வேதங்கள் அவன் தலைமையை உயர்த்திப் பேசுகின்றன. நம்மைக் கண்டவழியும் நமக்குமேல் தத்துவங்கள் ஒடுங்காமல் கிடக்கின்றன. அங்ஙன மாக நமக்குத் தலைமை பேசுவதெங்ஙனம்? சந்திர னும் நட்சத்திரங்களும் சூரியனின் ஒளியைப் பெற்றே பிரகாசிக்கின்றன. அவ்வாறே நாமும் உருத்திரன் அருளைப் பெற்றே பிரகாசிக்கின்றோம். நமக்கு வேதங்கள் ஏதும் புகழ் பேசியது உண்டானால் அது வும் அவ்வுருத்திரனுக்குரியதே." இங்ஙனம் பிரமா பிரமத்தை விசாரித்த தக்கனுக்கு உபதேசிக்கின்றார்.

இவ்வாறு சத்திய லோகத்திலே பிரம்ம உப தேசஞ் செய்த பிரமா மேலேயுள்ள வைகுந்த

லோகத்தைக் கடந்து அப்பாலுள்ள திருக்கைலாசத்துக்கு வருகின்ருர். அங்கே ஒரு பக்கத்தில் வீற்றிருந்த ஆறுமுக சுவாமி மந்திரங்களின் முதற்கண்ணதாகிய ஓங்காரத்தின் பொருளைப் பிரமாவிடம் வினவி, பிரமா அதன் பொருள் அறியாது மயங்குவது கண்டு இரங்கி, பன்னிரண்டு திருக்கைகளாலும் நான்கு தலைகளிலும் குட்டி இரண்டு திருவடிகளாலும் நல்ல உதையுங் கொடுக்கின்ருர். அப்பால், கல்லாலுக்கும் மேலே ஒரு உபதேசம் நடக்கின்றது. அங்கே கேத்திர கணிதம் வினவுவது போலச் சிவத்தைத் தேவி ஒன்று வினவுகின்ருர். "தேவரீர் இருந்தபடி இருக்கத் திருவருள் விசேஷத்தினலே இந்த உலகம் தோன்றி நின்று அழிகின்றது என்று வேதம் செப்புகின்றது. உலகத்தை இங்ஙனம் செய்கின்ற திருவருட் சக்தியாகிய நானே உலகத்தைப் படைக்கின்றேன்; காக்கின்றேன்; அழிக்கின்றேன். அப்படியானல் தேவரீருக்கும் உலகத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லையே" என்று சிவசக்தி அகங்கரிக்கின்றது. அப்பொழுது சிவபெருமான் சிவசக்தியை நோக்கி, "சூரியன் இருந்தபடி சும்மா இருக்கக் கிரணந் தானே உலகத்தை நடத்துகின்றது. சும்மா இருக்கும் சூரியனல் உலகத்துக்கு என்ன பிரயோசனம்? கிரணம் சூரியனை விலகி நின்று காரியத்தை நடத்தலாமே" என்ருர். சக்தி தலை பணிகின்றது. அது சிவத்தை இன்றி அமையாது.

இவ்வாற்ருல் எண்ணிறந்த உபதேசங்கள் கந்த புராணத்தில் வருகின்றன. கந்த புராணத்தில் ஒரு காண்டத்துக்கு உபதேச காண்டம் என்று பெயர்.

புராணம் முழுவதற்குமே அப் பெயரை வழங்கினுலும் பொருத்தமாயிருக்கும்.

தர்மத்துக்குப் புறம்பானவர்கள் தொடக்கம் 'தர்மம் என்ன? அர்த்தம் என்ன? காமம் என்ன? மோக்ஷம் என்ன?' என்று விசாரிப்பவர்கள் இறுதியான யாவருக்கும், இன்னும் அப்பாற்பட்டவர்களுக்கும் அவரவர்க்கு ஏற்ற முறையில் அவரவர் வாழ்க்கையை நல்வழிப்படுத்தவல்லது கந்தபுராணம்.

**"புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி"** என்ற பாட்டில் சுப்பிரமணிய சுவாமியின் பெருமை துதிக்கப்படுகின்றது. இப் பாட்டு கந்தபுராணத்தின் பெருமை பேசிய தென்றுங் கொள்ளத்தக்கது. கந்த புராணம் படிப்பவர்களையும் கேட்பவர்களையும் புன்னெறி யதனிற் செல்லும் போக்கினின்றும் விலக்குவது; அம்மட்டில் அமையாமல் மேலாம் நன்னெறி ஒழுகச் செய்வது. ஆகவே, விலக்கும் விதியுமாகிய அறம் கைவரச் செய்வது. அறத்துக்குப் பயன் மனத்துக்கண் மாசிலனுதல். மனந் தூயவர்களுக்கு அதன் மேல் அது நவையறு காட்சி நல்கும். நவையறு காட்சி தான் 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும — எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காணும் அறிவு'. அந்த அறிவுதான் ஒருவனுக்கு அறத்தின் விளைவான பொருளைச் சித்திக்கச் செய்கின்றது. மெய்ப் பொருள் சித்தித்தவன் இருவினையினீங்கி அவனருளாலே அவன் தாள் வணங்குகின்ருன். அதுவே இன்பம். அதன் மேல் உயிர் தாடலைப்படுகின்றது. பன்னிரு தடந் தோள் வள்ளல் பாதபங்கயங்களைத் தலைக்கூடுகின்

றது; அதுதான் வீடுபேறு. இவ்வாற்ருல் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் பயப்பது கந்தபுராணம். இந்திரராகிப் பார்மேலின்பமுற்று இனிதுமேவி — சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வதற்கு உறுதுணையானது கந்தபுராணம்.

## நாரதர் :

கந்தபுராணத்தில் வருகின்ற எண்ணிறந்த பாத்திரங்களுள் நாரதர் என்ற ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொள்வோம். அப் பாத்திரத்துக்குப் பிறகே சிறிது தூரம் சென்ருலே தர்மார்த்த காம மோக்ஷங் களினியல்புகளையும் சித்தாந்த நுண் பொருள்களையும் உணர்தற்கு அது போதுமானதாயிருக்கும்.

தக்கனுடைய புதல்வர் ஆயிரவர் தக்கன் விரும்பியவாறு பிரமாக்களாகும் பொருட்டுத் தவஞ் செய்கின்ருர்கள். அங்கே நாரதர் தோன்றுகின்ருர். நாரதர் மனந்தூயராய் நவையறு காட்சி கைவந்தவர்; அதனுலே பொருள் இதுவே என்று துணிந்தவர். அவர் தக்கனுடைய பிள்ளைகளின் தவநோக்கத்தைக் கண்டு கைகொட்டிச் சிரிக்கின்ருர்; அவர்களை அவ்வழியினின்றுந் திருப்பி முத்திபெற்றுய்தற்கு வழி காட்டுகின்ருர்.

இதே நாரதர் பிரமவிஷ்ணுக்கள் அடிமுடிதேடுகின்ற இடத்திலும் தோன்றுகின்ருர். அவர்களை நோக்கி உங்கள் உத்தியோகங்களை உங்களுக்குத் தந்தவர் ஆர் என்று கேட்கின்ருர்.

சூரன் திக்குவிஜயஞ் செய்து அரசு வீற்றிருக்கின்ருன். நாரதர் எட்டிப் பார்க்கின்ருர். சூரன் 'நீ ஆர்' என்று கேட்கின்ருன். "நான் உன் பெரியப்பா; உன் க்ஷேமங் கருதித் திருக்கைலாசத்தில் தவம்புரிகின்றேன். உன் பராக்கிரம கோலத்தைக் கண்டு கண்குளிர இங்கு வந்தேன்" என்கின்ருர்.

சூரனை எட்டிப்பார்த்த நாரதர் அக்கண்களால் தினைக் கொல்லை யொன்றில் பரண் மீதிலே ஒரு பச்சைப்பசிய குறப்பெண் ஒருத்தியையும் பார்க்கின்ருர். அப் பெண்ணின் பக்குவ நிலை அவருக்குத் தோன்றுகின்றது. நேரே சுப்பிரமணிய சுவாமியிடம் போய் அப்பெண்ணின் பக்குவ நிலையை எடுத்துச் சொல்லுகின்ருர்.

நாரதர் போன்ற ஒரு சிறந்த பாத்திரம் ததீசி முனிவர். அவர் தக்கனுக்கு எடுத்துரைத்தவை பெரிய வேத உண்மைகள்,

பாத்திரங்கள் போன்று கந்தபுராணத்தில் வரும் சிவகதைகளும் எண்ணிறந்தவை.

"புவியினர் ஏனையர் புராணங் தோறும்
சிவகதை யுணர்கிலர் என்னில் தீருமோ அவர்மயல்"

வள்ளிநாயகி தெய்வநாயகியாரின் கதைகள் தமிழ் நுதலிய அன்பின் பகுதிகளான களவுக்கும் கற்புக்கும் தலைசிறந்த உதாரணங்கள்.

இப்படிப்பட்ட சிறப்புக்கள் வாய்ந்த கந்தபுராணம் இந்த யாழ்ப்பாணத்திலே பழைய காலத்

திலே ஒவ்வொரு சைவாலயத்திலும் மடாலயங்களிலும் வருடந்தோறும் விதிப்படி படித்துப் பொருள் சொல்லப்பட்டு வந்தது. வருடத்தில் மூன்று மாச காலம் கந்தபுராண காலமாயிருக்கும். ஆண்களும் பெண்களும் மூன்றுமாச காலம் காப்புக்கட்டி விரதமிருந்து கேட்பார்கள். ஒரு கிராமததில் பல கோயில்கள் இருக்கும். ஒவ்வொரு கோயிலிலும் பல்வேறு மாசங்களில் புராணம் ஆரம்பித்து நடக்கும். படித்துப் பொருள் சொல்லுகிறவர்கள் தத்தம் கிராமத்திலும் அயற் கிராமங்களிலும் சென்று சென்று படித்துப் பொருள் சொல்லி வருவார்கள். படித்துப் பொருள் சொல்லும் முறை யாழ்ப்பாணத்துக்கே உரிய ஒரு தனிப்பட்ட முறை. கோயிற் சந்நிதானத்தில் தெற்கே வடக்குமுகமாக இருந்து ஒருவர் பாட்டை வாசித்துப் பொருளுக் கேற்பப் பிரிப்பார், மற்றொருவர் கிழக்கு முகமாக இருந்து பொருள் சொல்லுவார். முதல் பதப்பொருள், பின் பொழிப்புரை, அதன் மேல் விசேட உரை சொல்லப்படும். வாசிக்கிறவர் எச்சுதியில் எந்த இராகத்தில் வாசிக்கிருரோ பொருள் சொல்லுகிறவரும் அச் சுதியில் அந்த இராகத்திற் பொருள் சொல்லுவார். விசேஷ படிப்புக்களுக்குப் பிரசித்த வித்துவான்கள் அழைக்கப்படுவார்கள். இந்த வழக்கம் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்தொட்டே நடந்துவருகின்றது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்களுள் யாரோ ஒரு புண்ணியவான் இந்த வழக்கத்தை இங்கு ஏற்படுத்தியிருக்கலாம். இதனுலே செந்தமிழ் வழங்கும் சைவ சித்தாந்த உணர்ச்சியும் வளர்ந்துவரலாயது.

---

# கண்ணூறு

கந்தபுராணத்திலே தமிழும் சைவமும் ஓங்கி வளர்ந்து வருகின்ற யாழப்பாணத்துக்கு ஒருநாள் கண்ணூறு உண்டானது.

மிலேச்சர்களான பறங்கியர்கள் யாழ்ப்பாணத்தை எட்டிப்பார்த்தார்கள்.

அன்றே நமது நாட்டுக்கு வந்தது நாசம். தமிழ் அரசு மறைந்தது.

தமிழரசர்கள் யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஒரு தமிழ்ச் சங்கம் தாபித்திருந்தார்கள்.

இரகுவம்சம் என்கின்ற தமிழ் இலக்கியம், பரராசசேகரம் என்கின்ற ஒப்புயர்வில்லாத வைத்தியம், செகராச சேகரம் என்கின்ற சோதிடம் அந்தச் சங்கத்தின் பெறுபேறுகள். தமிழரசுடன் சங்கமும் தொலைந்தது. காக்கைவன்னியன் என்கின்ற கோடரிக் காம்பு பறங்கியரை வரவேற்றான். திருக்கேதீச்சரம் திருக்கோணமலை ஆகிய தேவாரம் பெற்ற புண்ணிய ஸ்தலங்களும் மற்றும் சைவாலயங்களும் தரைமட்டமாயின. பெரிய பெரிய புள்ளிகளெல்லாம் 'தொன்சுவான்'கள் ஆயினர். பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயில் எசமான்கூடத் தமது பெயருக்கு முன் ஒரு பிரணவம் சேர்த்துத் தொன்சுவான் இரகுநாத மாப்பாண முதலியார் என்று எழுத நேர்ந்தது. தலைப் பாகை வைக்கிறவர்கள் சிலுவைக் குறித் தலைப் பாகை வைக்க வேண்டு

மென்பது சட்டம். வாழையிலையில் சாப்பிடுவதே சமயத் துரோகம். பசுக்கொலை பெரிய புண்ணியம். இந்தக் கொடுமைகளைச் சகிக்காமல் திருநெல்வேலியிலிருந்த ஞானப்பிரகாசர் போன்ற மகான்கள் பிறவிக் கடலை நீந்துகிறவர்கள் போன்று, பாக்கு நீரிணையை நீந்தி வேதாரணியக்கரையை அடைந்து தாய்நாட்டிற் சரண்புகுந்தார்கள். இவ்வாறே நூற்றைம்பது வருடகாலம் கழிந்தது. அதன்மேல் ஒல்லாந்தர் கண்வைத்தார்கள். அவர்களும் பறங்கியர் போலவே, நூற்று முப்பது வருடம யாழ்ப்பாணத்தைத் தலைகீழ் செய்தார்கள். ஏறக் குறைய முன்னூறு வருட காலம் யாழ்ப்பாணத்தின் துரதிர்ஷ்ட காலம்.

"முந்தொரு காலத்தில் மூவுலகந் தன்னில்
வந்திடும் உயிர்செய்த வல்வினை அதனாலே
அந்தமில் மறையெல்லாம் அடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரும் மருளுற்றார்"

என்று கந்தபுராணம் கூறுகின்ற அடிதலை தடுமாற்ற நிலையை அன்று யாழ்ப்பாணம் அடைந்திருந்தது. இன்றைக்குப் பிரிவினை என்கின்ற தீவினையினாலே தாய்நாட்டிற் சில பகுதிகள் படுகிறபாட்டை அன்றைக்கு யாழ்ப்பாணம் பட்டது. அம்மை நோய் வந்தவர்களின் முகம்போல ஈழநாட்டின் முகமாகிய யாழ்ப்பாணம் அழகுகுலைந்து கிடந்தது. ஆனால், யாழ்ப்பாணத்தின் அகத்தே தமிழரசர் காலத்திலே சைவாலயங்களில் ஆரம்பித்து வைத்த கந்தபுராண ஊற்று நரம்புத் துய்கள் தோறும் குமுறிக்கொண்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் வந்து சேர்ந்தார்கள் வெளிக்கு நல்ல பிள்ளைகளான வெள்ளை

யர்கள். யாழ்ப்பாணம் இரு கரங்களையும் விரித்து அவர்களை வரவேற்றது. அவர்கள் சர்வசமய சுயா தீனம் தமது இலட்சியம் என்று வாய்மலர்ந்தார்கள். தரைமட்டமான சைவாலயங்கள் தலை நிமிர்ந்தன. கந்தபுராணம் முன்னையினும் மேலோங்கியது. "பிரிந் தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ!" சைவமுந் தமிழும் கந்தபுராண மூலம் தலை நிமிர்ந்தன. வெள்ளை யர்கள் "ஓகோ" என்று திகைத்தார்கள். அவர்கள் கசக் கிருமிகள். பறங்கியர் ஒல்லாந்தர் அன்றறுக்கிற வர்கள். இவர்கள் நின்றறுக்கிறவர்கள். வெள்ளை யர் மிக மிக நல்ல பிள்ளைகளாய் நமது சந்ததிக்கு இரங்குகிறவர்கள் போன்று கல்வியைக் கிறிஸ்தவப் பாதிரிகளிடம் ஒப்பித்தார்கள். அவர்கள்,

"நல்லவழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநாளுந் தருகுவோம் நாம் சொல்வதைக் கேளும்"

என்று மருட்டித் தமது நாட்டுக் கல்வியைப் பரப்ப ஆரம்பித்தார்கள். கந்தபுராணம் தாண்டவம் ஆடு கின்ற திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஒதுங்கி மறைந் தன. கந்தபுராண கலாசாரத்துக்கு மெல்ல மெல்ல வெந்நீர் விடத் தொடங்கினார்கள். அந்த அந்தச் சமயத்தவர்களுக்கு அவ்வச் சமயத்தில் அவர்கள் வைத்திருக்கும் விருப்பைக் குலைப்பதே வெள்ளைக் கல்வியின் அடிப்படை நோக்கமாயிருந்தது. மூல வேரில் வேலை செய்தார்கள் ஆங்கிலேயாகள். யாழ்ப் பாணத் தலைவர்களின் உயர்தர வாழக்கை உத்தி யோக மேன்மைகள் பாதிரிமாரின் கைக் கயிற் றில் தங்கியிருந்தன. யாழ்ப்பாணமாகிய பாவையை வேண்டியவாறு கூத்தாட்டிக் கொண்டிருந்தார்கள். காரியந் தெரிந்தவர்களின் உள்ளங் கொதித்தது.

அந்தக் கொதிப்புக் கந்தபுராணக் கொதிப்பு. அக் கொதிப்பினின்றும் ஒரு குழந்தை யாழ்ப்பாணத்து நல்லூரிலே கொதித்துக்கொண்டே உதயஞ் செய்தது; வெள்ளையர்களின் சூழ்ச்சியைக் குழந்தைப் பருவ திலேயே உணர்ந்துகொண்டது. குழந்தை வளரு கின்றது. குழந்தையின் சூழல் பொல்லாத கிறிஸ் தவ சூழல். ஆயினும் அக் குழந்தை கந்தபுராண உதிரத்தில் பிறந்து கந்தபுராணத்தில் வளர்ந்தது. இருபத்தாறு வயசு நிரம்பி இருபத்தேழாம் வயசு தொடங்குகின்றது. குழந்தை வாலிபனாய் விட்டது; அந்த வாலிபருக்குச் சிவஞான சித்தியாரிலிருந்து ஒரு பாட்டோ சிவஞான போதத்திலிருந்து ஒரு சூத் திரமோ சொல்லி வைத்தற்கு அப்பொழுது இங்கே மருந்துக்கு ஒரு ஆளில்லை. "பைபிள்" போதிக்க மாத்திரம் எத்தனையோ ஆட்கள் இங்கு உண்டு. வாலிபருக்குப் "பையிள்" முழுதும் நல்ல வாய்ப் பாடம். அந்த வாலிபர் ஆர்?

இருபத்தாறு வயசு நிரம்பிய கெம்பீரமான ஒரு வாலிபர் கந்தபுராண உணர்ச்சி வீறுகொள்ள இந்த யாழ்ப்பாணத்திலிருந்து தாய் நாட்டை நோக்கி நடக் கின்றார்; அங்கே சைவத்துக்கும் தமிழுக்கும் உறை விடமான திருக்கைலாச பரம்பரைத் திருவாவடு துறை ஆதீனம் அந்த வாலிபரை வரவேற்கின் றது. சித்தியாருக்கு உரை கண்டவருள் ஒருவரான ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவ்வாலிபரை ஒரு உபந்நியாசம் செய்யும்படி குறிப்பிடுகின்றார். வாலிபர் புட்கலாவர்த்த மேகமாய் மாறிப் பிரசங்கமழை பொழி கின்றார். அவருடைய பேச்சு அத்தியற்புத அதி மதுரச் சுத்தச் செந்தமிழாயிருந்தது. பேச்சின் கருத்

துச் சுத்தாத்துவித சைவ சித்தாந்தத்தின் சிகரமாய் மிளிர்ந்தது. ஆதீனம் ஆராமை மிக்கு அந்த இளம் வாலிபரை "நாவலர்" என்று வாழ்த்தியது. நாவலருக்குச் சைவசித்தாந்த உணர்ச்சி எங்கிருந்து வந்தது? கந்தபுராணத்திலிருந்தே வந்தது. அதை அவர் அறியாமலே இருக்கலாம். கந்தபுராணம் நாவலர் இரத்தத்தில் ஊறியிருந்தது. நாவலர் மீண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அன்றைய சூழல் நாவலரை ஒரு சீர்திருத்த புருஷர் ஆக்கியது. சைவத்தையும் தமிழையும் வளர்த்தற் கென்று நாவலர் தம்மை அர்ப்பணஞ் செய்தார். தாய் நாட்டையும் இந்தச் சேய் நாட்டையும் ஒப்பிட்டு நோக்கிச் சீர் திருத்தங்களை ஆரம்பித்தார். அப்பொழுது தாய்நாட்டிற் காணாத ஒரு அநுகூலக்காற்று இங்குத் தோன்றுத் துணையாய் உதவுவதை நாவலர் கண்டார். அந்த அநுகூலக் காற்று யாது என்பதை நாவலர் கூற்றிலிருந்தே காண்போமாக.

அநுகூலக்காற்று:-

"இந்தியாவிலே சைவ சமயிகளுள்ளும் சைவ சமயத்தில் உட்பற்றில்லாதவர்கள் பலரேயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே கிறிஸ்து மதத்திற் புகுந்தவர்களுள்ளும் சைவ சமயத்தில் உட்பற்றற்றவர் அரியர் ஆதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னை என்னிற் கூறுதும்:

"எத்துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் எட்டுணையுந் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்விய வாக்கியம் கந்தபுராணத்துள்ள பதியிலககணத் திருவிருத்

தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினாலே இவர்கள் உள்ளத்து ஊற்றெடுத்த மெய்யுணர்வேயாம்.

"பாதிரிமார்கள் கிறிஸ்து மதம் எத்தேசத்திற் பரவினும் பரவும்; யாழ்ப்பாணத்தில் உள்ளபடி பரவாது என்று அந்தரங்கத்திற் புலம்புகின்றார்கள்.

"இந்தியாவிலே சிவபுராணப் பிரசங்கம் செய்யும் கோயில்கள் மிக அரியன; இத் தேசத்திலே அது செய்யப்படாக் கோயில் இல்லை. இந்தியாவிலோ வித்துவான்கள் சைவ சமய குருமார் முதலியோர்களுள்ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தவர் சிலர்; இத் தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்.

"இப்போதும் இருக்கின்ற ஒரு கிறிஸ்து சமய உபதேசியார் ஏறக்குறைய இருபத்தெட்டு வருஷங்களுக்கு முன் நம்முள்ளே நால்வருடன் அந்தரங்கத்திற் கலந்து பேசியபோது 'பைபிள்' வசனங்களெல்லாம் ஒருங்குதிரண்டுங் கந்தபுராணத்து அவைபுகுபடலத்தினும் அமைச்சியற்படலத்தினும் உள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களுள் ஒன்றனது ஓரடிக்குத் தானும் ஆற்றாது! ஆற்றாது! என்ன அற்புதம்! அற்புதம்!!" என்று கண்ணீர் வார உரோமஞ் சிலிர்ப்ப மிக்க ஆராமையோடு சொல்லினர்.

"இவ் வியாழ்ப்பாணத்திலே நெடுங் காலம் வாசஞ் செய்து கொண்டு சைவ சித்தாந்த பண்டிதர்களோடு பலகாலும் சமயவாதஞ் செய்து சைவ சித்தாந்த உண்மையை அறிந்த சில பாதிரிமார்களுக்கு உட்பற்றுச் சைவ சமயத்திடத்தேயாம். இவ்

வுண்மையை அவர்களோடு அந்தரங்கத்திற் கலந்து சம்பாஷித்த விவேகிகளுக்கு இனிது விளங்கும். அப்பாதிரிமார்கள் நமது பெரியபுராணத்துச் சாக்கிய நாயனர் போலக் காலம் விட்டார்கள்; விடுகின்றார்கள்; விடுவார்கள். மனத்திலே பதிரூப பரம சிவத்தியானம். வாக்கிலே தமது பசுரூப கிறிஸ்து மதப் பிரசங்கம் !!! சைவ சித்தாந்திகளுடைய மணமும் வீசப்பெற்றறியாத மற்றைப் பாதிரிமார்கள் யாது செய்வார்கள்! பாவம் !! பாவம் !!!

"பாதிரிமார்கள் எதிரே முழங்காற் படியிடுதல், இராப் போசனம் எடுத்தல் முதலிய கிரியைகளினாலும் கோடுகளிலே விவிலிய புத்தகம் எடுத்துப் பிரமாணம் பண்ணுகையினாலும் கிறிஸ்தவர்கள் போல நடிக்கின்றார்கள். ஆயினும் தங்கள் தங்கள் வீடுகளிலே விபூதி தாரணம் அநுட்டானம் செய்து கொண்டும், சைவ சமயக் கோயில்களிலே செய்யப்படுகிற பூசை திருவிழா முதலியவைகளுக்கு வேண்டும் திரவியங்கள் கொடுத்தனுப்பிக் கொண்டும், தாங்கள் அங்கே போய் மறைவாகத் தரிசனஞ் செய்து கொண்டும், தங்கள் மனைவியரை அங்கே அனுப்பிக் கந்தபுராணம் கேட்பித்துக் கொண்டும், தங்களுக்கும் தங்கள் பெண்டிர் பிள்ளைகளுக்கும் வியாதி வந்த பொழுது பிராமணரிடத்திலும் குருக்கண்மாரிடத்திலும் பணங் கொடுத்து அவரைக் கொண்டு சிவ பூசை கிரக செபம் முதலியன செய்வித்துக் கொண்டும் வருகின்றார்கள்.

"சைவ சமயத்தை இகழ்ந்துங் கிறிஸ்து சமயத்தைப் புகழ்ந்தும் பற்பல புத்தகங்கள் எழுதி அச்சிற் பதிப்பித்துப் பரப்பிய எத்தனையோ கிறிஸதவர்

கள் இப்பொழுது வெளிப்பட விபூதி தரித்துத் தாங்கள் முன்னே எழுதியவைகள் எல்லாம் அபத்தம் அபத்தம் என்று மறுத்துச் சைவ சமயமே மெய்ச் சமயம் என்று பாராட்டிக்கொண்டு திரிவதை அறியாதவர் யாவர்!"

இந்த வசனங்கள் அநுபவ முதிர்ச்சியில் 1872-ல் நாவலர் அவர்கள் எழுதி வெளியிட்ட யாழ்ப்பாணச் சமய நிலை என்ற புத்தகத்தில் உள்ளவை.

கந்தபுராண கலாசாரம் அருஞ் சந்தர்ப்பத்தில் நமக்கு ஒரு நாவலரைத் தந்தது. அன்றி, நாவலர் எடுத்த முயற்சிகளுக்குத் தோன்றாத் துணையாய் அநுகூலமும் செய்தது. நாவலர் அவர்கள் எடுத்த முயற்சிகளைப் போலிச் சைவர்கள் எதிர்த்தார்கள்; கிறிஸ்தவர்கள் எதிர்க்கவில்லை. அப்பொழுது "இஃது என்ன ஆச்சரியம்!" என்று நாவலர் அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு ஆச்சரியப்படவில்லை. கிறிஸ்தவர்கள் எதிர்க்காமையின் மூல காரணத்தை நாவலர் அவர்கள் பின்பு கண்டு கொண்டார்கள்.

இத் தேசத்திலே கிறிஸ்து சமயத்தைப் பரப்புதற்கு மேலைத் தேசத்திலிருந்து வந்தவரும், "பைபிளி"ன் தமிழ் மொழி பெயர்ப்பை நாவலர் அவர்களைக்கொண்டு திருத்துவித்தவரும் ஆகிய பார்சீவல் பாதிரியார் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கிறிஸ்தவர்களைப் "பஞ்சாட்சரக் கிறிஸ்தவர்கள்" என்று சிலேடையாகச் சொல்லுவாராம். "சம்பளம்" என்ற வார்த்தையில் ஐந்து அட்சரங்கள் உண்டு. பஞ்சாட்சரம்

என்பதற்குப் பாதிரியார் சொல்லுகிற ஒரு கருத்து (சம்பளம்) இது. மற்றக் கருத்து வெளிப்படை.

பார்சிவல் பாதிரியாரைத்தான் "நமது சாக்கிய நாயனுர் போலக் காலம் விட்டார்கள்; விடுகின்ருர்கள்; விடுவார்கள்" என்று நாவலர் அவர்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பதிற் சந்தேகமே இல்லை. பார்சிவல் பிற்காலததில் பாதிரியுத்தியோகத்தையே பரித்தியாகம் செய்து விட்டார். யாழ்ப்பாணக் கலாசாரம் அவரை அப்படிச் செய்யச் செய்தது போலும். சி. வை. தாமோதரம்பிள்ளை சைவ மகத்துவம் எழுத நேர்ந்ததும், கரோல் விசுவநாதபிள்ளை பொன்னூசி காய்ச்சி நாவிற் சுட்டுச் சைவத்துக்குத் திரும்பியதும் பிரசித்த வைபவங்கள். இன்னும் எத்தனையோ வைபவங்கள் நடந்திருக்கின்றன. சமீபத்திற் காலஞ்சென்ற கிறிஸ்தவ போதகர் ஒருவர் சிவஞான சித்தியாரை வசனஞ் செய்து வைத்துப் போயிருக்கின்ருர். அவ்வசன நூலில் ஓர் இடத்தில் முன்பின் அதிகஇயைபு இல்லாமலே 'கலியுகத்தில் கந்தசுவாமி உபாசனையே விசேஷம்' என்ற கருத்து வருகின்றது. கந்தபுராண கலாசாரம் அவர் தம் வசமிழந்து அப்படி எழுதும்படி செய்வித்து விட்டது. இது நிற்க.

கந்தபுராணப் படிப்பு நாவலர் காலத்திலே உச்ச நிலையை அடைந்தது. அவருக்கு ஒரு மருமகர் உரை சொல்லுதற் கென்றே பிறந்தவர். அப்பொழுது சைவாலயங்கள் தமிழும் சைவமும் வளரும் சர்வகலாசாலைகள் ஆயின.

---

# வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை

பொன்னம்பலபிள்ளை கந்தபுராணம் படிக்கிற சூழலில் பிறந்து கந்தபுராணப் படிப்புக்குள் வளர்ந்தார். கிறிஸ்தவ சூழலை அவர் அணுகவில்லை. ஆங்கிலம் அவருக்குத் தெரியாது.

பொன்னம்பல பிள்ளை நாவலர் அவர்களுக்கு மருமகர்; அல்லாமல் மாணவருமாவர்.

கந்தபுராணத்தில் திருமணப் படலங்களும் மற்றைய விசேஷ பகுதிகளும் பொன்னம்பல பிள்ளைக்குப் பாடம் சொல்லி வைக்கப்பட்டன. திருச்சிற்றம்பலக் கோவையார் உரை, திருக்குறள் பரிமேலழகருரை, நன்னூல் விருத்தியுரை ஆகிய மூன்று நூல்களும் வசனம் வசனமாக நாவலர் அவர்களிடம் படித்தார். பொன்னம்பல பிள்ளையின் படிப்பு அவ்வளவுதான். ஆனால், இப்பொழுது மகா வித்துவ சிரோமணியாய் விளங்கும் பிரமஸ்ரீ சி. கணேசையர், அப்பொழுது பிரசித்திபெற்று விளங்கிய கோப்பாய்ச் சபாபதி நாவலர், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை இன்னும் யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் என்றிருந்தவர்கள் எவர்களோ அவர்கள் யாவர்களும் பொன்னம்பல பிள்ளையிடம் பாடங் கேட்டவர்கள்.

தென்னிந்தியாவில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களை நடமாடும் வாசிகசாலை என்பார்கள். அவ்வாறே இங்கே பொன்னம்பலபிள்ளை நடமாடும் சர்வகலாசாலையாக விளங்கினார். தெருக்

கள் தெருத்திண்ணைகள் குளக்கட்டுக்கள் மரநிழல்கள் எல்லாம் பொன்னம்பலபிள்ளை பாடஞ் சொல்லும் இடங்கள். பொன்னம்பலபிள்ளை அழகுகள் நவரசங்கள் சொட்டச் சொட்டப் பாட்டுக்களுக்கு உரை விரித்தற்கென்றே பிறந்தவர் என்று சொல்லுவார்கள். அவரை மாணவர்களாகிய மதுகரங்கள் எப்பொழுதும் சூழ்ந்து கொண்டேயிருப்பார்கள். உச்சியிலிருந்து உள்ளங்கால் பரியந்தம் உள்ளங்காலிலிருந்து உச்சிபரியந்தம் பொன்னம்பல பிள்ளையின் உருவமே இலக்கிய ரசனையால் ஆனது. தனிக் கற்கண்டிற் செய்த பலகாரம்போலே இலக்கிய ரசனைமயமாயிருந்தார் பொன்னம்பலபிள்ளை. எந்த நேரத்திலோ புதிது புதிதாகத் தமக்குத் தோன்றுகின்ற இலக்கியரசனையை யாருக்காவது வெளிப்படுத்தாமல் இருக்கமாட்டாமை பொன்னம்பலபிள்ளையின் நித்திய கல்யாண குணம். பொன்னம்பலபிள்ளை இந்த மாட்டாமையாகிய ரசகுணத்தை ஒருவாறு தணித்துத் தணித்து முட்டுத் தீர்வதற்கு உபகாரஸ்தலங்களாய்ப் புராண படனம் நடைபெறுகின்ற முக்கிய சைவாலயங்கள் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்திற் பிரசித்தி பெற்று விளங்குகின்ற வண்ணை வைத்தியேசுவரன் கோவிலின் வித்தியா மண்டபம் ஒரு காலத்தில் நாவலர் அவர்களின் சைவப் பிரசங்கங்கள் பிரவாகிக்கும் இடமாயிருந்தது. அதனைத் தொடர்ந்து அம்மண்டபம் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை நவரசங்களும் ஒழுக ஒழுகப் புராணங்களுக்கு உரை விரிக்கும் இடமாய் மாறியது; அது ஒரு சர்வகலாசாலை ஆயிற்று.

பொன்னம்பலபிள்ளை வியாக்கியானம் செய்யும் போது ஒருபுறத்தே மாணவர்களும் வித்துவான்களும் ஏடும் எழுத்தாணியுமா யிருப்பார்கள்; மற்றொரு புறத்தில் பெண்கள்; ஏனைய இடங்களில் ஆண்கள் எள்ளிட இடமின்றி இருப்பார்கள். குண்டூசி விழுந்தாற் கேட்கும். வாசிக்கிறவர் எச்சுதியில் எந்த இராகத்துக்கு வாசிப்பாரோ அச்சுதியில் அந்த இராகத்துக்குப் பொன்னம்பலபிள்ளை உரை விரிப்பார். விசேஷ வியாக்கியானங்கள் அலை அலையாய் எழுந்து புரண்டுகொண்டிருக்கும். பொன்னம்பலபிள்ளைக்கு வாசிக்கிறவர்கள் விசேஷ ஆயத்தம் செய்துகொண்டு வருவார்கள். எந்த இடம் எந்த இராகத்துக்கு வாசிக்க வேண்டுமோ அந்த இடம் அந்த இராகத்துக்கே வாசிக்கப்படும். அன்றி, காலத்துக் கேற்கவும் இராகம் மாறுதல் அடையும். பொன்னம்பலபிள்ளைக்கு வாசிக்கிறவர்களுக்குப் பிரத்தியேகமான பிரபலத்துவம் உண்டு.

பொன்னம்பலபிள்ளைக்கு உள்ளக் கிளர்ச்சி எவ்வளவு அமையுமோ அவ்வளவுக்கு அவர் விரிக்கும் உரைக் கருத்துக்களும் புதியன புதியனவாய் ஊற்றெடுத்துப் பிரவாகிக்கும்.

'மருகனென் றவனை உன்னி':-

"பூசனை புரிந்தபின்னர்ப் புவனமீன் றருள்தன் கையைப்
பாசமதகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமோ டளித்தேன் என்று நெடுமறை மனுக்கள்கூறி
வாசநல் லுதகமுய்த்தான் மருகனென் றவனை யுன்னி"

என்ற திருவிருத்தம் கந்தபுராணத்தில் சுவாமி திருக்கல்யாணத்தில் வருகின்றது. இமயமலை அர

சன் தன் தவப் புதல்வியாகிய உமாதேவியாரின் திருக் கரத்தைப் பரஞ்சுடராகிய பரமசிவத்தின் திருக் கரத்துள் வைத்துத் தாரைவார்த்துத் தத்தஞ் செய் கின்றான். பாட்டிறுதியில், 'மருகனென் றவனை உன்னி'' என்று ஒரு தொடர் வருகின்றது. அவனை - அந்தப் பரஞ்சுடராகிய பரமசிவத்தை, மருகன் என்று உன்னி - தனக்கு வந்து வாய்த்த மருமகன் என்று நினைத்து மகிழ்ந்து தத்தம் செய்தான் என்று உரை விரிப்பது வழக்கம்.

ஆனால், ஒரு நாள் அப்பாடலுக்கு உரை சொல் லும்போது நினையாப் பிரகாரம் அந்தத் தொடருக்குப் பொனனம்பலபிள்ளை வேறொரு பிரகாரம் பொருள் விரித்து வியாக்கியானம் செய்தார்.

அந்தப் பரமசிவத்தை, மருகனென் றவனை - ஒரு காலத்திலே தனது அறியாமையாலே தனக்கு மரு கன்தானே என்று அகங்கரித்த அந்தத் தக்கனை, (அவன் பட்ட பாடுகளை) உன்னி - இமயமலை அரசன் சிந்தித்து, தான் அவ்வாறு நினையாமல், புதல்வியை உலகமாதா ஆகவும், பரமசிவத்தை முழுமுதற் பரம் பொருளாகவும் கருதித் தத்தம் செய்தான் என்பது பொன்னம்பல பிள்ளையின் அன்றைய புதிய வியாக் கியானத்தின் சிறு சுருக்கம்.

இந்த வியாக்கியானம் ஒரு இரவு நடந்தது. அடுத்த நாட் காலை தொடக்கம் பல வாரம் பல மாதம் பல வருடகாலம் "மருகனென் றவனை யுன்னி'' என்ற தொடர் படித்தவர்கள் மத்தியில் பேசப்பட்டு வந்தது. இன்றைக்கும் கிராமாந்தரங்களில் சுவாமி கல்யாணப் படிப்புத் தினத்தில் மேற்படி தொடரும்;

அதனைத் தொடர்ந்து பொன்னம்பல பிள்ளையின் அருமைப் பாடும் எடுத்துப் பேசப்பட்டு வருகின்றது.

"ஆவநத்த நேர்மாக்கள் வாழ் அரிபுரம்" :- இது மார்க் கண்டேயப் படலத்தில் வருகின்றதொரு தொடர். இத்தொடரில் ஆ என்பதற்குக் காமதேனு என்று பொருள் கூறி, அப்பாலுள்ள சொற்களுக்கும் காம தேனுவோ டியையப் பொருள் பண்ணிக் கொள் வது வழக்கம். ஒரு நாள் பொன்னம்பல பிள்ளை அந்தத் தொடரை "ஆபத் + அத்தம்" என்று பிரித்து 'ஆபத்துக் காலத்தில் உதவும் சேமநிதி போன்றவர்கள் அரிபுரத்து மனிதர்கள்' என்று வியாக்கியானம் செய்தாராம். தபம் என்னும் சொல் தவம் என்று வருவதுபோல, ஆபத் ஆவத்தென நின்றது.

இவ்வாறே எத்தனையோ தொடர்களுக்கும் பாட் டுக்களுக்கும் விசேஷ கருத்துக்கள் பொன்னம்பல பிள்ளையின் மாணவ பரம்பரையில் உள்ளவர்கள் நூதனம் நூதனமாகச் சொல்லுவார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து இராமநாதபுரம் சமஸ் தானத்துக்குப் போகிற வித்துவான்களை மதுரைத் தமிழ்ச் சங்க ஸ்தாபகரான பாண்டித்துரைத் தேவர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை எப்படி யிருந்து எவ்வாறு வியாக்கியானம் செய்வார் என்று வினவி வினவி, அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கேட்டு வாயூறுவாராம்.

மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளையின் மாணவருள் வன்ரெுண்டஞ் செட்டியார் என்பவர் ஒரு

வர்; மிகப் படித்தவர். இவரைப்பற்றி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். இந்த வன்றொண்டஞ் செட்டியாருக்குப் பிற்காலத்தில் கண் பார்வை மங்கிப்போனது. கண்ணின் சக்தி அனைத்தும் செவிக்குப் போய்விட்டது. அவர் செவி நுண் செவி. "செவிக்குணவு இல்லாத போழ்து" என்ற திருக்குறள் செட்டியாருக்குப் பொருத்தமானது. செட்டியார் செவிக்குணவு தேடி யாழ்ப்பாணம் வந்தார். பொன்னம்பலபிள்ளை புராணத்துக்குப் பொருள் விரிக்கும் இடத்துக்குப்போய் ஒரு புறத்தில் இருந்தார். வியாக்கியானம் திரை எறிகின்றது. செட்டியாருக்குத் தெவிட்டாது தித்தித்து அமுது ஊறுகின்றது; உடம்பு வெடிக்கிறது போன்ற ஆனந்தம் மேலிடுகின்றது. செட்டியார் இருந்தபடி மெல்ல மெல்ல இடம் பெயரத் தொடங்கி விட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் எட்டிப் பொன்னம்பல பிள்ளையைக் கட்டித் தழுவி விட்டார். ஆராமையின் ஆற்றுமை அது!

நாவலர் அவர்களுக்குப் பெரிய புராணம் போலே பொன்னம்பல பிள்ளைக்குக் கம்ப ராமாயணம் நரம்புத் துய்களிலும் ஊறிக் கிடந்தது. சீவக சிந்தாமணியிலும் பொன்னம்பல பிள்ளைக்கு விசேஷ பயிற்சி உண்டு.

சீவக சிந்தாமணியை முதன் முதற் பதித்த போது டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஒரு பிரதியைப் பொன்னம்பல பிள்ளைக்கு அனுப்பி ஒரு கடிதமும் எழுதியிருக்கின்றார். அக்கடிதம் இது:-

"பாற்கடலின் ஆழம் மந்தரமலைக்குத் தெரியுமேயன்றி வேறு எந்த மலைக்குந் தெரியாது. அது போலச் சீவக சிந்தாமணியின் ஆழம் உங்களுக்குத் தான் தெரியும். ஏதோ ஒருவாறு நான் பதிப்பித்திருக்கிறேன். தாங்கள் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்." (என் சரித்திரம் – உ. வே. சா.)

இப்படிச் சாமிநாதையர் எழுதுவாரேயானால் பொன்னம்பல பிள்ளையின் சிந்தாமணிப் பயிற்சி எப்படியிருக்கும் என்பது சிந்திக்கத்தக்கது

கம்பராமாயண ரசனைகளையும் சிந்தாமணி முதலிய காவிய ரசனைகளையும் கந்தபுராணத்துக்கு வியாக்கியானம் செய்யும்போது ஏற்ற ஏற்ற இடங்களில் பொன்னம்பலபிள்ளை அள்ளிச் சொரிவார். அது வித்துவான்களாகிய மதுகரங்களுக்குப் புத்தம் புதிய அமிர்தமாய்ப் பொங்கிக்கொண்டிருக்கும்.

பொன்னமபலபிள்ளை கந்தபுராணக் கருத்துக்களின் உயர்வையும் காவிய ரசனைகளின் அளவையும் நன்கு அறிந்தவர்; ஆனால் வரிசை அறிந்தவர். புராணக் கருத்துக்களைச் சிரமேற்கொள்ளுகின்ற இந்த நாட்டிலே காவிய ரசனைகளைப் பொருள் செய்து தலைக்குமேலே தூக்கி வைத்து ஒரு சிந்தாமணிவிழா நடத்த இப் பொன்னம்பலபிள்ளை கனவிலும் நினைக்கவில்லை. கந்தபுராண கலாசாரம் தலையெடுத்த இந்த நாட்டிலே காவிய ரசனைகளைப் பொன்னம்பலபிள்ளை தலைமறைவாகவே வைத்துக் கொண்டார். நாவலர் அவர்கள் தென்னிந்தியாவுக்குப் போகிற காலத்திலே சபாபதிச் செட்டியார் என்பவர் வீட்டில் அவருடன் சென்ற பொன்னம்

பலபிள்ளை மறைவிலே வித்துவ மதுகரங்களுக்குச் சீவக சிந்தாமணியைத் தித்தித்துக் காட்டுவாராம். சிந்தாமணி பொன்னம்பல பிள்ளைக்கு வாய்ப் பாடம். ஆனல், அதனை அதற்குரிய வரிசையில் வைத்துப் பொன்னம்பலபிள்ளை வழங்கி வந்தார். கந்தபுராணத்தைக் கைகூப்பி வணங்குவதில் அவர் தவறியதில்லை. நாவலர் அவர்களுக்குப் பிறகு ஒரு சமயம் பொன்னம்பலபிள்ளை கம்ப ராமாயாண ரசனை மிகுதியினலே அதில் சிவபரம்பொருளுக்கு இழுக்கு வரும் இடங்களை வேறு பிரகாரம் அமைத்துக் கொண்டு வண்ணை வைத்தியேசுவரன் கோவிலிலே கம்ப ராமாயண வியாக்கியானம் ஆரம்பித்தார். அது கவியரசர்களுக்குக் கிடைத்தற் கரியதொரு அமிர்தபானமாயிருந்தது. ஆனல், கந்தபுராண கலாசாரம் மிக்க இந்த நாட்டிலே கம்ப ராமாயணம மதிக்கத்தக்கதேயாயினும் அருணூல்களுக்குரிய சிவசந்நிதிக்கு அது அடாது என்ற கருத்தும் இருந்தது. பொன்னம்பலபிள்ளைக்கு எதிர் சொல்ல ஆள் ஆர் ? நாவலர் அவர்கள் இல்லையே. கம்ப ராமாயண ரசனை நடந்தது. வாலி வதை உச்ச நிலையை எய்தியது; அவ்வளவுதான். அந்த அளவில் பொன்னம்பலபிள்ளை இரசிகர்கள் கதறக்கதற மறைந்துவிட்டார். வாலிக்கு அம்புவிட்ட சோகம் பொன்னம்பலபிள்ளையை இழந்த சோகம ஆயிற்று. இந்தச் சோகம் கந்தபுராணத்துக்குரிய சிவ சந்நிதியில் கம்ப ராமாயணம் படிக்க நேர்ந்ததே யென்ற கண்ணீருடன் இங்கு இன்றும் பெருகுகின்றது. இந்தக் கண்ணீருக்குள்ளே கண்ணுள்ளவர்களுக்குக் கந்தபுராண கலாசாரம் என்று ஒன்று அடிப்பட்டிருப்பது நன்கு தோன்றும்.

# புராண படனம்

## ‘அந்த நெடுங்கிரிவாலோடும்’’

பொன்னம்பல பிள்ளையின் காவிய ரசனைகளைக் கண்டவர்களேயோ கேட்டவர்களேயோ கணடவர்கள் கூட இக்காலத்துச் சாதாரண ரசனைகளையும் கவிதைகளையும் சகிக்கமாட்டார்கள்.

இலக்கியங்களிலே உயிரான ரசனைக்கு உரிய பொருள் எது என்று தெரிய வேண்டும்.

தெரிந்ததன் மேல் ரசனையை எடுத்துக் காட்டுதற்கு ஏற்ற பாஷை நடை கைவர வேண்டும்.

இந்த இரண்டுமாயிருந்தவர் பொன்னம்பல பிள்ளை.

பொன்னம்பலபிள்ளை வியாக்கியானம் செய்யும் போது வாசிக்கிற பாக்கியம் வாய்த்தவர்களுக்கு, இங்கே ஒரு தனி மதிப்பு இருந்து வந்தது. எழுத்து வாசனையற்ற பெண்களிடத்திலும் கந்தபுராணப் பயிற்சி மிக்கிருந்தமையினுலே, புராணம் வாசிக்கிறவர்களும் பொருள் சொல்லுகிறவர்களும் தவறு வாராமல் வெகு கவனமாக இருக்கவேண்டியவர்கள் ஆனுர்கள். ஒரு சிறு தவறு நேர்ந்தாலும் பெண்களுக்கே வகை சொல்ல முடியாது.

கந்தபுராணம் அச்சில் வெளிவந்த பின்பும் கோயில்களிலே வைத்துப் பூசை செய்வதற்கு வாய்ப்பாகக் கந்தபுராண ஏடுதான் உபயோகிக்கப்பட்டு வந்தது. ஏடுகளைச் “செல் துளைத்த துளையன்றி

மெய்ப்புள்ளி விரவாத சென்னுள் ஏடு" என்று சி வை. தாமோதரம்பிள்ளை வருணிப்பார். ஏடுகளிலே மெய்க்குப் புள்ளியிடுவதில்லை. அன்றி, ரகரத்துக்கும் 'ா' வுக்கும் பேதந்தோன்ருது.

ஒரு கோயிலிலே பெரிய சபையிலே அதுவும் பொன்னம்பலபிள்ளை வியாக்கியானம் செய்கின்ருர். சூரபத்மன் வதைப் படலம் நடக்கின்றது. வாசிக்கிறவர்,

"அந்த நெடுங்கிரிவரலோடும்" என்ற தொடரை,

"அந்த நெடுங்கிரிவாலோடும்" என்று வாசித்துவிட்டார். "வரலோடும்" "வாலோடும்" ஆய்விட்டது. சபை மௌனங் குலையாமலே சற்றே நிமிர்ந்து பார்த்துத் தலை குனிந்து விட்டது. பொன்னம்பலபிள்ளை "வரலோடும்" என்று திருத்திவிட்டு வியாக்கியானம் செய்கின்ருர். அன்றைக்கு இப்படியொன்று நடந்துவிட்டது. ஆனல், அடுத்த நாள் தொடக்கம் அப்படி வாசித்த அந்த மனிதருக்குப் பெயர் "அந்த நெடுங்கிரிவாலோடும்".

"தேய்புரி பழங்கயிறனர்" "கயிறுகுறுமுகவையார்" என்று சங்கத்துப் புலவர் சிலருக்கு அவர்கள் வழங்கிய அழகிய தொடர்களால் அவர்கள் பெயர்கள் வழங்குகின்றன. அப்படி அவர்கள் பெயரை வழங்கும்படி செய்தவர்களும் பெரிய சங்கப் புலவர்களே.

ஆனல், இந்த யாழ்ப்பாணத்திலே அந்த மனிதருக்கு,

"அந்த நெடுங்கிரிவாலோடும்" என்ற பெயரை வழங்கியவர்களும் வழங்கச் செய்தவர்களும புராணப் படிப்புக் கேட்கின்ற யாழ்ப்பாணத்துச் சாதாரண பெண்களே.

யாழ்ப்பாணச் சமய நிலையிலே, "இந்தியாவிலோ வித்துவான்கள் சைவகுருமார் முதலியோருள்ளுங் கந்தபுராணம் முதலியன அறிந்தவர் சிலர்; இத் தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்" என்று நாவலர் அவர்கள் எழுதியதற்கு,

"அந்த நெடுங்கிரிவாலோடும்" என்ற சம்பவம் நல்ல அகச்சான்று.

கந்தபுராணம் யாழ்ப்பாணத்துப் பெண்களின் உதிரத்தில் நன்கு ஊறியிருந்தது.

* * *

## 'பொறு பிள்ளாய்!'

பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே கந்தபுராண படனம் நடைபெற்று வருகின்றது. அன்று ஒரு நாள் சூரனமைச்சியற் படலம். முன்னிடங்களையெல்லாம் வித்துவ சமூகங்கள் கவர்ந்து கொண்டார்கள். எள்ளிட இடமில்லை. அலை அடங்கிய சனசமுத்திரம். நாவலர் அவர்கள் பொருள் சொல்லுகின்றார்கள். மருமகர் (வித்துவ சிரோமணி) வாசிக்கின்றார். இவர்கள் இருவரையும் ஒரு பிரதான இடத்தில் ஒருங்கு தரிசிப்பது எப்பொழுதாயினும் கிடைக்கக்கூடியதொன்று அன்று. நாவலர் அவர்கள் முன்னிலையில் பொன்னம்பல

பிள்ளை தலைகாட்டுவதில்லை. அது மிகப்பெரிய சரித்திரம். அது கிடக்க. அன்று அந்தச் சபை கண்களும் செவிகளும் விருந்து பெற்று மிளிர்கின்றது.

"வேதக் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய் நின்ற அமலன்"

என்கின்ற சுப்பிரமணியப் பிரபாவம் பேசுகின்ற பாடல் வருகின்றது; வாசிக்கப்பட்டது. பதப்பொருள் கூறிப் பொழிப்புரையுஞ் சொல்லி அதன்மேல்,

"வேதக் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன்"

என்ற பகுதிக்கு விசேஷ வியாக்கியானம் நடக்கின்றது.

வேதக்காட்சி — சாஸ்திர அறிவு. அது பாசஞானம். போதம் — ஆத்மபோதம். போதக்காட்சி — பசுஞானம். பாசஞானம் பசுஞானம் என்கின்ற இருவகை ஞானங்களாலும் பதிப்பொருளை அறியமுடியாது. அந்த ஞானங்களால் அறியமுடியாமையால் பதிப்பொருள் சூனியம் அன்று. பதிப்பொருளை அறிதற்கு இரண்டிலும் வேருன மற்ெருரு ஞானம் வேண்டும். அந்த ஞானத்துக்குப் பதிஞானம என்று பெயர். இது சுத்தாத்துவித சைவசித்தாந்த உண்மை. இந்தப் பேருண்மை நாவலர் அவர்கள் வாயிலிருந்து கங்கை போல் எல்லையின்றிப் பிரவாகிக்கின்றது. கண்ணீர் ததும்ப உரோமஞ் சிலிர்ப்பக் கரங்கள் குவிய நாவலர் அவர்கள் சுப்பிரமணியப் பிரபாவத்

தில் லயித்து, ஒரு கச்சியப்பசிவாசாரியர் போலாய்த், தம்மையிழந்து, வியாக்கியானவயப்பட்டு வியாக்கியானம் செய்கின்றார்கள். வியாக்கியான அலைகள் கரை புரண்டெழுகின்றன. எங்கும் நிசப்தம். காலம் யாரும் அறியாமலே கழிகின்றது. மௌனம் குடி கொண்டு சபை தன்னை இழந்துகொண்டிருக்கின்றது. இந்த அரிய சந்தர்ப்பத்திலே பொன்னம்பல பிள்ளை மெல்லென்று தமது வாய்க்குள் இனிய மதுர இசையில் குறித்த பாட்டின் பகுதியை நாவலர் அவர்கள் செவிக்கு மாத்திரம் கேட்கத்தக்க வகையில் படித்தார். ஏன் அப்படிச் செய்தார் என்ற காரணத்தை இதுகாறும் அறியோம். 'நாவலர் அவர்கள் வியாக்கியானவயப்பட்டுக் குறித்த பாடலின் பகுதியையே மறந்து விலகியிருக்கலாம்; அதனை ஞாபகம் செய்து வைப்போம்' என்ற கருத்தில், பொன்னம்பலபிள்ளை அந்த அசந்தர்ப்பத்தில் அப் பகுதியை மெல்ல வாசித்திருக்கலாம் என்று பலர் கருதுகின்றார்கள். பொன்னம்பலபிள்ளை எக்கருத்துப் பற்றியோ வாசித்தது உண்மை. நாவலர் அவர்கள் குறித்த பகுதிக்கு வியாக்கியானம் செய்துகொண்டிருக்கும்போது பிள்ளை அப்பகுதியை மெல்லென்று வாசித்தார். வாசிக்க,

நாவலர் அவர்கள் தமது வலக் கரத்தைப் பிள்ளைபக்கல் திருப்பி, "பொறு பிள்ளாய்" என்று சொல்லிவிட்டு, மேல் வியாக்கியானத்தைத் தொடர்ந்து வியாக்கியானம் செய்தார். மௌனம் குலையாமலே சபை முழுவதும் மெல்லென்று ஒரு திரை எறிந்தது. எல்லார் பார்வையும் ஒரே சமயத்

தில் பொன்னம்பலபிள்ளையை அணுகி மடங்கியது. இனி,

"இப்பொழுது எம் மனோரால் இயம்புதற்கு எளிதோ"

என்ற கம்பர் கவியைத்தான் சொல்லவேண்டும். பொன்னம்பலபிள்ளை அப்படியே ஸ்தம்பித்துப்போய் விட்டார். உரோமத் துவாரங்கள் எத்தனையுண்டோ அத்தனையும் வெயர்வை கொப்பளித்தன. வேட்டி சால்வை என்னும் இவைகளைப் பொருள் செய்யாமல் வெயர்வை ஊற்றெடுத்து ஒழுகி ஒழுகிப் பாய்ந்தது. பிள்ளை ஆடாமல் அசையாமல் இருந்தபடி இருந்தார். ஊறிப் பாய்ந்த வெயர்வை அப்படியே உலர்ந்து ஆவியாய் மாறியது. வெகுநேரம் வியாக்கியான உலகில் யாவரும் விம்மித மெய்தியிருந்தார்கள்.

உயர்ந்து ஆழ்ந்த உண்மைக் கருத்துக்களுக்கும் காவியரசனைகளுக்கும் தராதரந் தெரியாதவர்கள் இன்று போலவே வித்துவ உலகில் அன்றும் இருந்திருக்கிறார்கள்; அந்தச் சபையிலும் இருந்திருப்பார்கள். கருத்துலகத்துக்குப் பொன்னம்பலபிள்ளை செய்யும் வணக்கத்தை வெறுங் காவிய ரசிகர்கள் செய்வதில்லை. "நாவலர் அவர்களுக்கு மேல் பொன்னம்பலபிள்ளை; பொன்னம்பலபிள்ளைதான் காவியரசனைகளைச் சேர்த்துக் கந்தபுராணத்தை அழகு செய்பவர்" என்ற கருத்து அந்த இரசிகர்களுக்கு நிறைய உண்டு. அப்படிப்பட்ட இரசிகசிகாமணிகளுக்குப் பாடஞ் சொல்லுவதுபோல,

"பொறு பிள்ளாய்" என்ற சம்பவம் நினையாப் பிரகாரம் சுவாமி சந்நிதியில் அன்று நடந்துவிட்டது.

"சம்பந்தன் செந்தமிழுக்கு உயர்ச்சி திருநீல கண்ட யாழ்ப்பாணரின் யாழிசையில் தங்கியுள்ளது" என்ற தவருன ஒரு கருத்து திருநீலகண்ட யாழ்ப் பாணரின் ஊரில் உள்ளவர்கள் சிலருக்கு ஒரு சமயம் இருந்தது. அதனையறிந்த யாழ்ப்பாணர் மனம் நொந்து சம்பந்தப்பெருமானுக்கு விண்ணப் பம் செய்ததும், யாழ்முரியினுலே சம்பந்தன் செந் தமிழ்தான் இசைக்கு அடங்காமல் நாடகமாய் முடி யும் முத்தமிழ் என்பதை யாவரும் உணர நேர்ந்ததும் பெரிய புராணத்திற் காணும் சம்பவங்கள்.

பெரிய புராணத்திலே "யாழ்முரி"ச் சம்பவம் போன்றுதான் அன்று கந்தபுராண படனத்தில் "பொறு பிள்ளாய்"ச் சம்பவம் நடந்தது போலும். திருநீலகண்ட யாழ்ப்பாணர் போலப் பொன்னம்பல பிள்ளை உள்ளூர மகிழ்ந்திருப்பார்.

நீதிமன்றத்திலே மாமனுர் வாய்ச் சொல்லினுலே சிறைக்கூடம் புகுந்த பொன்னம்பலபிள்ளை அங்கே யிருந்து மனமுருகி,

"ஆறுமுக ஐயற்கே ஆட்செய்யப் பெற்ற னம்யாம்
வேறறங்கள் வேண்டா இனி"

என்று பாடினுர். அப்படிப்பட்ட அவர்,

அன்று,

**"பொறு பிள்ளாய்"**

என்றபோது கந்தபுராணப் பெருமையை வெறுங் காவிய ரசிக உலகம் ஓர் அளவுக்கு உணர நேர்ந்

தது குறித்து மகிழ்ந்தேயிருப்பார் என்பதில் சந்தேக மேயில்லை.

"நீயும் நானுமா ஞான நாயகராகிய சுப்பிரமணி யப் பெருமானின் பிரபாவத்தைப் பேசவல்லேம்" என்று ஒரு சமயம் சூரபத்மாவை நோக்கிச் சிங்கமுகா சுரன் கூறினன். அவ்வாறுதான் அன்று வித்துவ உலகம் "நாமா கந்தபுராணத்தின் ஆழத்தைக் காண வல்லேம்!" என்று பேசிக்கொண்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள கற்றவர்களும் மற்றவர் களும் கந்தபுராணத்தை அருணூல் வரிசையில் வைத்து ஒரு திருமுறையாகவே போற்றிப் பேணி வருகின்றனர்கள். கற்று முதியவர்களாய் இப்பொழு தும் இருக்கின்றவர்கள் சிலர் கந்தபுராணத்தில் ஒவ் வோர் பகுதியை ஆரம்பிக்கும்போதும் முடிக்கும் போதும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்வதோ டமையாமல், "கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் திரு வடி வாழ்க" என்று ஆராமைமிக்குச் சொல்லி வரு கின்றனர்கள்.

# பெறுபேறு

"இக் கந்த புராணத்தை விதிப்படி மெய்யன் போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய் நீக்கம், செல்வம், புத்திர பாக்கியம், சத்துரு ஜயம், இராஜ வசியம் முதலிய பயன்களைத் தாம் வேண்டியவாறே பெறுவார்கள்.

"இது நெடுங்காலம் பலராலும் அநுபவத்தினால் நிச்சயித்துணரப் பட்ட விஷயம்.

"இது சத்தியம் சத்தியம் முக்காலும் சத்தியம்" என்கின்றார்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

இக்கூற்றுக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் சரித்திரச் சுருக்கத்தின் இறுதிப் பந்தி.

இது யாழ்ப்பாணத்தின் ஆழ்ந்த அடிப்பட்ட கந்தபுராண அநுபவத்தைத் தெட்டத் தெளியக் காட்டுகின்றது.

நாவலர் அவர்கள் அத்தியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழாகிய கந்த புராணத்தைத் தாய் நாடாகிய தமிழ் நாட்டிலே சென்னை மாநகரில் அச்சிற் பதிப்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். அப் பொழுது அவர்களுடைய கந்தபுராணக் கண்களுக்கு "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என் கின்ற ஓர் உணர்ச்சி தோன்றுகின்றது. அதனாலே தாய்நாட்டை நோக்கி ஒரு வார்த்தை குறிப்பிடாம லிருக்க நாவலர் அவர்களால் முடியவில்லை. கந்த புராண முகப்பில் கை அடையாளம் இட்டுத் தாய்

நாட்டிலே தமிழ் வழங்கும் இடங்களுக்கு இரங்கி, நாவலர் அவர்கள் பொறித்த வார்த்தை இது :-

"தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுக்குள்ளே திருக்கோணமலை திருக்கேதீச்சரம் என்னும் இரண்டையும் திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய தலங்களுக்குள்ளே கதிர்காமம் என்னும் ஒன்றையும், உடைத்தாய ஈழதேசத்திலே எங்கணுமுள்ள சிவாலயம் விக்கினேசுரராலயம் சுப்பிரமணியராலயம் என்னும் திருக்கோயில்கள் எல்லாவற்றினும் இக் கந்தபுராணம் பண்டைக் காலந் தொடங்கி வருஷந்தோறும் தவருது வாசித்துப் பொருள் சொல்லப்பட்டு வருகின்றது. அங்குள்ள ஆண் பெண் என்னும் இருபாலாரும் வாசிப்போரையும் பொருள் சொல்லுவோரையும் வழிபட்டு இதனை நியமமாகக் கேட்டுக்கொண்டு வருகின்றார்கள். இத்தேசங்களில் உள்ள திருக்கோயிலதிகாரிகளும் மடாதிபதிகளும் தங்கள் தங்கள் திருக்கோயில்களிலும் மடங்களிலும் இக் கந்த புராணத்தை வருஷந் தோறும் வாசித்துப் பொருள் சொல்லும்படி செய்வார்களாயின், இங்குள்ள சைவசமயிகளும் இதனை நியமமாகக் கேட்டுய்வார்களே."

இக் குறிப்பிலே "இத் தேசங்கள்" என்றது தென்னிந்தியாவிலே தமிழும் சைவமும் வழங்கும் இடங்களை. பறங்கியர் ஒல்லாந்தர்காலத்திலே கெட்டு நொந்து போன யாழ்ப்பாணம் நாவலர் அவர்கள் காலத்திலே தலைநிமிர்ந்து தாய் நாட்டுக்கே உபகரிக்கும் நிலையை அடைந்தது. இந்தப் பெறுபேறு கந்தபுராண விசேஷம் என்றே நாவலர் அவர்கள் கைபோட்டுச் சொல்லியிருக்கின்றார்கள்.

சில பெண்கள் பிறந்த அகத்திலும் பார்க்கப் புக்க அகத்திற் பிரகாசிக்கின்ருர்கள். அவ்வாறே, கந்தபுராணமும் பிறந்த அகத்திலும் பார்க்கப் புக்க அகமாகிய யாழ்ப்பாணத்திலே மிக மிகப் பிரகாசித்துப் பல நூற்ருண்டுகளாய்ப் பயன்பட்டு வந்திருக்கின்றது.

நாவலர்காலம் வெள்ளை அரசாங்கத்தின் ஆரம்ப காலம். ஒரு நாட்டைச் சூறையாடுவதில் பறங்கியர் ஒல்லாந்தரின் முறை வேறு, வெள்ளையரின் முறை வேறு. வெள்ளையரின் முறை அடுத்துக் கெடுக்கிற முறை; வேரிலே வெந்நீர் ஊற்றுகிற முறை. வேருெரு வகையாகச் சொன்னுல் தோளிலிருந்து செவியைக் கடிக்கிற முறையென்றும் சொல்லலாம். இந்த முறை இப்பொழுது வெள்ளையர் குடியேறிய அமெரிக்காவிலே அரசு வீற்றிருக்கின்றது.

ஒரு நாள் இந்த வெள்ளை அரசாங்கத்தின் வெற்றிகரமான முறை எங்கோ ஓரிடத்தில் படு தோல்வியடைந்தது உண்டு. அந்த இடம் யாழ்ப்பாணமே. இந்த அதிர்ஷ்டம் யாழ்ப்பாணத்துக்குத் தற்செயலாக வந்து வாய்த்தது. இந்த வாய்ப்பு சந்தர்ப்பத்தை நோக்காது வெள்ளையர்கள் செய்த ஒரு தவறுதலால் வந்ததென்றும் சொல்லலாம்.

மகாபாரதத்திலே நச்சுப்பொய்கை ஒன்று வருகின்றது. அதன் கரையில் நால்வர் இறந்து கிடக்கின்ருர்கள். மற்ருெருவர் மரத்தடியில் இறந்தவர் போன்றுவீழ்ந்துகிடக்கின்ருர். பஞ்சபாண்டவர்களும்

இறந்தே போனர்கள் என்று அவர்களைக் கொல்ல வந்த காளமாமுனி நம்பிவிட்டது. காளமாமுனியைப் போன்றதுதான் வெள்ளை அரசாங்கமும். பறங்கியர் ஒல்லாந்தர் காலத்துடன் ஈழநாட்டுக் கலாசாரம் அழிந்து ஒழிந்து தொலைந்து விட்டதென்றே நம்பினர்கள் வெள்ளையர்கள். அது யாழ்ப்பாண விஷயத்தில் எதிர்ப் பலன் அளித்து விட்டது.

நீறுபூத்த நெருப்புப் போலப் பறங்கியர் ஒல்லாந்தர் காலத்திலே உள்ளே கொதித்துக் கொண்டிருந்த கலாசாரம் வெள்ளையர் காலத்திலே தலை நிமிர்ந்தது; சுவாலித்தெழுந்தது. பெருநெருப்பைப் பச்சை என்ன செய்யும்? காடு பற்றி எரியும்போது பச்சை மரங்களும் சேர்ந்துதானே எரிகின்றன.

சி. வை. தாமோதரம்பிள்ளை ஒரு சிறு குழந்தை. ஒப்புயர்வில்லாத கவிதா சாமர்த்தியம் படைத்த முத்துக்குமார கவிராஜசேகரரிடம் திண்ணைப் பள்ளியில் குழந்தை படிக்கின்றது. கவிராஜர் "**முடிவிலாதுறை சுன்னுகத்தான்**" என்ற பாட்டுப் பாடினவர்; "நல்லவழி காட்டுவோம் உடுபுடைவைசம்பளம் நாளுநாளுந் தருகுவோம், நாம் சொல்வதைக் கேளும்" என்ற நீண்ட விருத்தம் பாடினவர்; "இயேசு மத பரிகாரம், ஞானக்கும்மி" என்ற தமிழ் ஒழுகுகின்ற பாடற் புத்தகங்களும் கவிராஜர் இயற்றியவை. இப்படிப்பட்ட கவிராஜரிடம் தாமோதரம்பிள்ளையாகிய குழந்தை படிக்கின்றது; படிக்கப் படிக்கக் குழந்தையின் கண், "நமது கலாசாரம் எது? எது?" என்று விழிக்கின்றது; சுற்று முற்றும் சுழன்று பார்க்கின்றது; இந்தச் சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவப் பாதிரிகள்

மூலம் ஆங்கிலம் புகட்டப் படுகின்றது ; குழந்தை B A., B L. ஆனது. ஆனால் தாமோதரம்பிள்ளை விஷயத்தில் "B A.,B L." வால்காட்டவில்லை. வாலைத் தலை விழுங்கிவிட்டது. தலை குழம்பவில்லை. தாமோதரம் பிள்ளை தமிழில் தலைகாட்டினார்.

எஸ். வி. தாமோதரம்பில்லை பீ. ஏ., பி. எல். ஆகவேண்டியவர், வாலில்லாமல்,

சி. வை. தாமோதரம்பிள்ளை ஆயினார்.

அவருடைய தலை "எஸ். வி." ஆகக் குழம்பவில்லை ; வாலும் ஆடவில்லை. ஆங்கிலம் வால்மடங்கித் தலை குனிந்து தாமோதரம்பிள்ளையின் முன்னிலையில்வாய்பொத்திநின்றது. சி.வை தாமோதரம்பிள்ளை தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை ஆய்விட்டார். S. V. தாமோதரம்பிள்ளை என்று அவர் மறந்தும் எழுதுவதேயில்லை. அவர் இங்கிலீசுக்காரனுக்குப் பிறக்கவில்லை ; தமிழன் பெற்ற அருந்தமிழ்ப் பிள்ளை.

"பல்காற் பழகினுந் தெரியா உளவேல்
தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்" என்பர்.

தாமோதரம்பிள்ளை இவைமூன்றினும் முதற்கண் நின்ற தொல்காப்பியத்துக்கு உயிர்ப்பிச்சை வழங்கி அதனை அச்சு வாகன மேற்றித் தமிழ் நாட்டுக்கே தந்தார். அவ்வாறே கற்றறிந்தார் ஏத்துங் கலித்தொகையையுந் தந்தார்; தமிழ் தந்தார் ; பிள்ளை மெல்ல மெல்லத் தமிழ்த் தந்தை ஆய்விட்டார்.

பாதிரிமார் ஒன்றை நினைத்து ஒன்று செய்ய மற்றொன்று விளைந்துவிட்டது. பழைய கலாசாரம்

கால்கொள்ளும் சந்தர்ப்பத்திலே பாதிரிகளின்முயற்சி அனைத்தும் அந்த முளைக்கு இட்ட பசளையாய்ப் போனது.

தாமோதரம் பிள்ளையோடு B. A. பரீட்சையிற் சித்தி எய்திய மற்றெருருவர் விசுவநாத பிள்ளை.

இவர் யாழ்ப்பாணத்துச் சுதுமலையில் உள்ள வர். சென்னைச் சர்வகலாசாலையார் முதன் முதல் நடத்திய B. A. பரீட்சையில் சித்தி எய்திய பிள்ளை கள் இருவர். அந்தப் பிள்ளைகள் இருவரும் இந்த யாழ்ப்பாணத்துப் பிள்ளைகளே. இந்தப் பிள்ளைகள் இருவரில் விசுவநாதபிள்ளை மிக மிக அதிநுட்ப விவேகி. இந்த விசுவநாதபிள்ளைதான் பாதிரிமாரின் கைப் பம்பரமாகி யாழ்ப்பாணக் கலா சாரத்தைத் தலைகிளம்ப விடுவதில்லை என்று ஒரு காலத்தில் வால்கிளப்பிப் பாதிரிகளுக்குத் துணை நின்றவர். ஆனுல், நாவலர் அவர்கள் பழைய கலா சாரத்தின் தூய்மையை எடுத்துக் காட்ட விசுவநாத பிள்ளை அப்படியே வால்மடங்கி, ஆங்கிலம் படித்துச் சிவதூஷணை செய்த தமது நாவுக்கு அக்கலாசாரம் வால்காட்டாமலிருக்கும் பொருட்டுப் போலும், சிதம் பரத்திலே நடராஜர் சந்நிதியிலே பொன்னூசி காய்ச்சிச் சூடுபோட்டுக் கொண்டார். அவர் கணித விஞ்ஞானங்களில் நிபுணர். அவைகளைத் தூய தமி ழில் தர முயன்றவர்.

அவர் அக்ஷர கணிதத்தைத் தமிழில் தந்திருக் கின்ருர். அது கணிதம் பயிலுதற்கன்றித் தமிழ் படிப் பதற்கே படிக்க வேண்டியது. மொழிபெயர்ப்பாளர்

களுக்கும் கிளவியாக்க வேலையில் ஈடுபட்டிருப்பவர் களுக்கும் அது வழிகாட்டியானது.

கதிரைவேற்பிள்ளை என்பவர் அக் காலத்தில் ஆங்கிலம் படித்து நீதிபதியாய் ஊர்காவற்றுறையில் உத்தியோகஞ் செய்தவர். அவர் செய்த அகராதிதான் மதுரைத் தமிழ்ச் சங்கம் அச்சிட்ட தமிழ் அகராதி. சொற்களின் சுவரூபத்தையும் அவற்றின் சுத்தமான பொருள்களையும் எடுத்துக் காட்டுவதில் ஒப்புயர்வில்லாதது இந்த அகராதி. இது போன்ற சுத்தமான ஓர் அகராதி இன்னும் வரவில்லை என்றே சொல்லலாம். இனிவரும் அகராதிகளுக்கு அடிப்படையாயும் முன் மாதிரியாயும் இருக்கின்றது இந்த அகராதி. சுன்னுகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் தலைமையில் வித்துவான்கள் பலரை வைத்து இந்த அகராதியைச் செய்விததவர் நீதிபதி கதிரைவேற்பிள்ளை. இந்த அகராதி ஆறு பாகங்களாய் வெளிவர வேண்டியது. துரதிர்ஷ்ட வசமாய் இந்த அகராதியின் தகர எழுத்துக்கு அப்பாற்பட்ட பகுதிகளின் கைப் பிரதி மதுரைத் தமிழ்ச் சங்கம் தீக்கிரையான போது அகப்பட்டுப் பெரிதுஞ் சிதைந்து போனது. அதனலே, அகராதி சுருங்கி மூன்று பாகங்களாய் வெளிவர நேர்ந்தது

“ஆயிரத் தெண்ணூறு வருஷங்களுக்கு முன் தமிழர் நிலை” என்ற தமிழர் சரித்திரத்திற்கு அத்திபாரமான நூலை ஆங்கிலத்திற் செய்தவர் மல்லாகம் கனகசபைப் பிள்ளை. இவர் தென்னிந்தியாவிலே புகையிரதப் பகுதியில் பெரிய உத்தியோகத்திலிருந்தவர் புறநானூறு என்னும் ஒருநூல் இருக்கிறதென்

பதைத்தெரியவைத்தவர் கனகசபைப்பிள்ளை. கடைச் சங்கம் ஒடுங்கிய கால நிர்ணயம் பற்றிக் கனகசபைப் பிள்ளை செய்த முடிபுதான் இன்றைக்கும் பிரமாண மாயிருக்கின்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே நெடுங் காலம் தலைமையாசிரியராயிருந்தவர் செல்வத்துரைப் பிள்ளை. அவர் தந்தையார் சிதம்பரப்பிள்ளை. அவ ரும் இந்துக் கல்லூரியில் தலைமையாசிரியராய் இருந் தவர். இக் கல்லூரியின் தாபகரும் அவரே. அவர் பெரிய தார்க்கிகர். நியாய இலக்கணம் என்கின்ற தருக்க நூல் அவர் செய்தது; அது ஆங்கில தருக் கத்தின் வழிவந்தது.

தெல்லிப்பழையில் இருந்தவர் வேலுப்பிள்ளைப் போதகர் என்னும் ஒருவர். அவர் கேத்திர கணிதத் தைத் தமிழிற் செய்ய முயற்சி செய்திருக்கிறூர்.

யாழ்ப்பாணக் கலாசாரம் ஆங்கில கலாசாரத் தைக் கபளீகரம் செய்துகொண்டு பெரிய ஆக்க வேலைகளுக்கு அடிப்படையான அத்திபார வேலை களுக்கு வழி செய்திருக்கின்றது.

பழைய நூல்களைப் பதிப்பதற்கு அத்திபாரமிட் டார் தாமோதரம்பிள்ளை. அவ்வாறே, தமிழர் சரித் திரத்துக்குக் கனகசபைப்பிள்ளை; அகராதிக்குக் கதிரைவேற்பிள்ளை; மொழிபெயர்ப்புக்கு விசுவநாத பிள்ளை. இன்று சென்னைச் சர்வகலாசாலை வெளி யிடும் தமிழ்க் களஞ்சியத்துக்கு அத்திபாரம் இட்ட தும் யாழ்ப்பாணமே. ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை "அபிதான கோசம்" என்று பெயரிட்டு முன்னமே

தமிழ்க் களஞ்சியம் ஆரம்பம் செய்து வைத்திருக்கின்ருர்.

ஆறுமுக நாவலர் எல்லாருக்கும் விளங்கத்தக்க தெளிவான நடையில் படிப்படியே பயன் தரும் வகையில் புத்தகம் எழுதவும் பதிக்கவும் நேர்ந்தது கிறிஸ்தவப்பாதிரிகளின் அதிர்ச்சியென்றே சொல்லப் படுகின்றது. நாவலரைத் தொடர்ந்து சங்கர பண்டிதர் சைவப்பிரகாசனம் செய்தார்; சபாபதி நாவலர் திராவிடப் பிரகாசிகை செய்தார். இவை இரண்டும் சைவ தமிழ்க் கலாசார பொக்கிஷங்கள்.

ஆறுமுக நாவலரின் ஒரு மாணவர் செந்திநாதையர். டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் தமிழுக்குச் செய்த பணிபோன்ற பெரும்பணியைச் செந்திநாதையர் சைவ சமயத்துக்குச் செய்திருக்கின்ருர். நாவலர் செய்யும் புராணப் பிரசங்கம் சைவப் பிரசங்கம் என்னும் இவைகளைக் கேட்டு, அதன் மேல் குறிப்பு எழுதி வைத்து விட்டன்றி உறங்காத விரதம் பூண்டவர் செந்திநாதையர். அவர் கந்தபுராண கலாசாரத்திலே முழுகித் திளைத்தவர்; கந்தபுராண நவநீதம் என்னும் ஒரு நூலும் செய்திருக்கின்ருர். அவர் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஒரு பிரதிநிதி. அவரைப்பற்றிப் பிரத்தியேகமாக அறிதல் வேண்டும்.

---

# ஏகாத்ம வாதம்

"ஏத்திடு சுருதிகள் இசைக்கும் மாண்பொருள்
மாத்திரைப் படாஎனு மாசில் காட்சியர்
பார்த்துணர் பான்மையாற் பலவ கைப்படச்
சூத்திர மானவுஞ் சொற்று வைகினன்"

வேதத்தின் ஞான காண்டமான உபநிடதங்களில் உணர்த்தப்படுகின்ற பொருள்கள் அளவைகளினுல் அளவுபடுத்தி அறிதற் கரியவை. மன மாசு நீங்கிய நல்லறிஞர்கள் அப்பொருள்களை ஒருவாறு உணர்தற்கு உபகாரமாக வியாசமகா முனிவர் பல்வேறு சூத்திரங்களினுல் ஒரு நூல் அருளியிருக்கின்ருர். அதற்குப் பிரமசூத்திரம் என்று பெயர்.

வேதாந்த சூத்திரம், உத்தரமீமாம்சை என்பன பிரமசூத்திரத்துக்கு வழங்கும் வேறு பெயர்கள்.

கந்தபுராணப் பதிப்பில் "ஏத்திடு சுருதிகள்" என்ற இப்பாடலுக்கு நீண்ட ஒரு அடிக்குறிப்புக் குறிப்பிட்டிருக்கின்ருர்கள். அக்குறிப்பு வருமாறு:-

"வியாசசூத்திரம் வேதாந்தசூத்திரம் எனவும் பிரமமீமாம்சை எனவும் உத்தரமீமாம்சை எனவும் பெயர் பெறும். அதற்கு நீலகண்ட சிவாசாரியர் சங்கராசாரியர் இராமாநுஜாசாரியர் மத்வாசாரியர் என்னும் நால்வர் பாஷ்யங்கள் செய்தனர். சைவர்களாற் கொள்ளப் படுவது நீலகண்ட பாஷ்யம். ஏகாத்மவாதிகளாற் கொள்ளப் படுவது சங்

கரபாஷ்யம். வைணவர்களாற் கொள்ளப் படுவது இராமாநுஜ பாஷ்யம். மாத்துவர்களாற் கொள்ளப் படுவது மாத்வபாஷ்யம். வியாச சூத்திரத்தின் உண மைப் பொருள் சைவ சித்தாந்தப் பொருளேயாம் என்பது,

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்."

என்னும் ஔவையார் திருவாக்கா னுணர்க. முனி மொழி என்றது வியாச சூத்திரத்தை.

புறப்புறச்சமயமும் புறச்சமயமும் அகப்புறச் சமயமும் அகச்சமயமும் எனச் சமயம் நான்கு வகைப்படும். அவற்றுள், புறப்புறச்சமயம் உல காயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம் என அறுவகைப்படும். புறச்சமயம் தருக்கம், மீமாம்சை, ஏகாத்மவாதம், சாங்கியம், யோகம், பஞ்சராத்திரம் என அறுவகைப்படும். இங்கே மீமாம்சை என் றது சைமினி சூத்திரமாகிய பூர்வமீமாம்சையை. ஏகாத்மவாதம் மாயாவாதமும் பாற்கரியவாதமும் கிரீயாப்பிரம்மவாதமும், சத்தப்பிரமவாதமும் என நான்கு வகைப்படும். சங்கரபாஷ்யத்துக்குப் பொருள் மாயாவாதப் பொருளேயாம். மாயாவாதம் உலகா யதம் முதலியவற்றோடு சேர்த்துக் கண்டிக்கப் படு தல், "மிண்டியமாய வாத மென்னுஞ் சண்டமாரு தஞ் சுழித்தடித்தாஅர்த்து உலகாயத னெனு மொண்டிறற் பாம்பின் — கலாபேதத்த கடுவிடமெய்தி

— அதிற்பெரு மாயையெனைப் பல சூழவும்" என்னுந் திருவாசகத்தானும் உணர்க."

சங்கராசாரியர் தில்லைவாழந்தணர் முதலிய அடியார்களுக் கெல்லாம் அடியவர் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரைச் சௌந்தரியலகரியினும், கண்ணப்ப நாயனாரைச் சிவானந்த லகரியினும், இயற்பகை நாயனாரையும் சிறுத்தொண்ட நாயனாரையும் சண்டேசுர நாயனாரையும் சிவபுஜங்கத்தினும் சங்கராசாரியர் துதித்திருக்கின்றார். சங்கராசாரியர் மகா சிவபக்தர்; சந்திர மௌலீசரைப் பூசிக்கின்றவர். கண்ணப்பநாயனாரைத் துதித்துப் பாடிய சுலோகங்கள் என்னையும் உருக்குகின்ற அன்புக்கனிகள்.

"நம்முடைய முடியின்மேல் உன்னாலே சாத்தப்பட்ட பூக்களை நீக்கும்படி அவன் வைக்கின்ற செருப்படி நம்முடைய குமாரனாகிய சுப்பிரமணியனுடைய காலினும் பார்க்க நமக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தருகின்றது. அவன் தன் வாயினால் நம்மேல் உமிழ்கின்ற நீரானது அன்பு மயமாகிய அவனுடைய தேகம் என்னும் கொள்கலத்தினின்றும் ஒழுகுகின்றபடியால் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களைப் பார்க்கினும் நமக்குப் பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன் தன்னுடைய தலைமயிரிலே செருகிக் கொண்டு வந்து சாத்துகின்ற புஷ்பங்கள் அவனுடைய மெய்யன்பானது விரிந்து விழுதல் போல விழுதலால் பிரமவிஷ்ணு முதலிய தேவர்கள் நமக்குச் சாத்தும் புஷ்பங்களும் அவைகளுக்குச் சற்றேனும் சமானமாகாவாம். அவன் நமக்குப் படைக்கின்ற மாம்சம் பதமாக வெந்திருக்கின்றதோ என்று

அன்பினுல் உருகி இளகிய மனசினேடும் மென்று சுவை பார்த்துப் படைக்கப் பட்ட படியால், வேத விதிப்படி யாகம் செய்கிறவர்கள் தரும் ஹவிசிலும் பார்க்க நமக்கு அதிக மதுரமாயிருக்கின்றது. அவன் நம்முடைய சந்நிதானத்தில் நின்று சொல்லும் சொற் கள் நிஷ்களங்கமாகிய அன்பினேடும் நம்மையன்றி மற்றெருருவரையும் அறியாது வெளிப் படுதலால், வேதங்களும் மகாமுனிவர்கள் மகிழ்ந்து செய்கின்ற ஸ்தோத்திரங்களும் ஆகிய எல்லாவற்றிலும் பார்க்க நமக்கு இனியவாயிருக்கின்றன.

"அறியாமையே நிறைந்துள்ள இழிவாகிய வேடு வர் குலத்திலே பிறந்த அவருக்கு வேதாகமாதி சாஸ் திரங்களிலே மகாபாண்டித்தியமுடைய மகாமுனிவர் களிடத்திலும் தேவர்களிடத்திலும் காணப்படாத உயர்வொப்பில்லாத இவ்வளவு பேரன்பு வந்தது; ஐயையோ எவ்வளவு அருமை! அருமை!"

இவ்வாறு கண்ணப்பநாயனுர் புராணத்தில் வரு கின்ற உருக்கமான கருத்துக்களடங்கிய பாடல்கள் சேக்கிழார் பாடியன அல்ல, வெள்ளியம்பலத் தம்பி ரான் என்பவரால் பாடப்பட்டு இடையிற் சேக்கப் பட்டன என்றும், பாடலின் கருத்துக்கள் சங்கரா சாரியர் இயற்றிய தோத்திரங்களின் உருக்கங்கள் என்றும் கூறுகின்றவர்களும் இருக்கின்ருர்கள்.

இங்ஙனம் உருகி உருகி நாயன்மாரைத் தோத் திரம் செய்த சங்கராசாரியரை ஆறுமுகநாவலரோ, அவருக்கு முந்திய சைவ சித்தாந்த அறிஞர்களோ தமது நாவினுல் ஏகாத்மவாதியென்ருே மாயாவாதி

என்றே கூறவில்லை. ஆனால், அவருடைய மதக் கொள்கைகளை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. சரித்திரமும் சமயமுந் தெரிந்த அறிஞர் சிலர் சங்கரரின் மதக் கொள்கையை "மறைந்த பௌத்தம்" என்றும், அப்படி ஒரு கொள்கையை அக்காலச் சமய நிலையே தாபிக்கச் செய்த தென்றும் கருதுகின்றார்கள்.

நிலையான பொருள் என்று ஒன்றில்லை. ஒரு வகையான நிலைமாற்றந்தான் உலகம். நிகழ்கின்ற நிமிஷங்கழிய மற்றொரு நிமிஷம் வந்து போகின்றது. அப்படித்தான் இடமும் மாற்றம் அடைகின்றது. இந்தக் கணத்திலிருக்கும் நாம் வேறு; அடுத்த கணத்தில் இருக்கும் நாம் வேறு. மாணிக்க கங்கை ஓடிக் கொண்டிருக்கின்றது. முதற்கணத்திற் காணுங் கங்கையை அடுத்த கணத்திற் காணமுடியாது. அப்படியிருந்தும் ஒரு மாணிக்க கங்கை பெருகுகின்றது. உண்மையில் அது ஒரு மாற்றமே. இந்த மாற்றந்தான் உள்ளது என்றனர் புத்தர். அந்த மாற்றத்தில் சிக்கிக் கவலைப்படாமைக்கு வழி துறைகளும் வகுக்க முயன்றார் புத்தர். புத்தசமயம் பாரதநாட்டை விழுங்கியது. அச்சமயத்தில் மாற்றம் என்று புத்தர் கூறும் உலகம் கயிற்றில் பாம்பு போல வெறுந் தோற்ற மாத்திரையே. பொய்யான தோற்றத்தைத் தோற்றுவித்துக் கொண்டு ஒரு மெய்யான நிலையான பொருள் இருக்கின்றது. அப் பொருளுக்குப் பெயர் பிரமம். பிரமம் ஆகிய ஒன்றுதான் உள்ளது;; இரண்டாவதொரு நிலைப்பொருள் இல்லை என்றனர் சங்கரர். இக்கொள்கையை நிலைநாட்டிப் பிரம சூத்திரத்துக்குப் பாஷ்யம் வகுத்துவிட்டார். அல்லா

மல் தம்கொள்கைக்கு உடநிடதங்களிற் பிரமாண முங் காட்டினுர். இதனுலே கணபங்கம்பேசும் பௌத் தம் அந்தக் கணமே வேதங்கள் பிறந்த பாரதநாட் டில் ஒரு கணமேனும் நிலைகொள்ள இயலாது ஓடி மறைந்தது. பௌத்தம் மறைய ஏகாத்மவாதம் தலை நிமிர்ந்தது.

"ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப் போய்
ஈற்றுக் கரடியை எதிர்ப்பட்ட வாறே"

என்றவாறே ஏகாத்மவாதம் என்கின்ற பிரசண்ட மாருதம் மோதி வீசியது.

கணந் தோறும் மாறும் மாற்றத்துக்கு ஒழுக்க விதிகளினுல் எப்படிப் பயன் இல்லையோ, அப்படித் தான் ஏகாத்மவாதத்திலும் ஒழுக்கத்துக்குப் பயன் பாடு இல்லை. பொருள் ஒன்றேயாயின் அப்பொருள் எக்குறை பற்றி எப்பொருளை வேண்டி ஒழுகுவது என்ற கேள்வி எளிதில் எழும்.

"உன்னை நீ பிரமமென்றே தெற்றெனஉணர்தி" என்ற சுக்கிரன்,

உன்னைக் கேட்க ஆளில்லாமையால் "கொலை யொடு களவு காமம் நிலையெனப் புரிதி" என்றதில் ஒரு பிழையுமில்லை.

ஆகவே, பௌத்தம் என்றஅண்ணனுக்கு ஏகாத் மவாதம் நல்லதொரு தம்பி யென்றே படுகின்றது. மனிதன் ஒவ்வொருவனும் தன்னைத் தானே பிரமம் என்று சொல்லிக் கொண்டு நன்ருகச் சோம்பித்

தூங்கலாம்; தான் தான் நினைத்த காரியத்தையும் மனம் போனவாறு செய்யலாம்; எல்லாம் பிரமம்.

ஆனால் அதிநுட்ப விவேகம் படைத்தவரான சங்கரர் மனிதன் சோம்பித் தூங்கிக் கிடக்காமல் தமது ஏகாத்மவாதத்தை மற்றொரு பெரிய உபாயம் செய்திருக்கின்றார். சீர்திருத்த புருஷர்கள் ஒன்று செய்து கொண்டு போகும்போது மற்றொரு குறை தலைநீட்டும். உடனே அதைப் போக்க வேறு வழி கண்டு கொள்வார்கள். "மனிதா, நீ கர்மம் செய்; உன் கடமையே சுதர்மம்; அதனைப் பயன்கருதாமற் செய்" என்று சங்கநாதம் செய்தார் சங்கரர். ஐந்தாம் வேதமாகிய கீதைக்குப் பாஷ்யம் செய்து அதன்மூலம் இந்தக் கர்ம காண்டத்தை வெளிப்படுத்தினார். இந்தக் கர்மகாண்டத்தை உலகம் ஏற்கும் நிலையிலிருந்தது; ஏற்றது. பாரதநாடு திலகர் முதல் வினோபாஜி ஈறான கர்ம வீரர்களைத் தந்தது; தலை நிமிர்ந்தது. இந்த ஒழுக்க விதி "பிரமம் ஒன்றுதானே" என்ற ஏகாத்மவாத ஞான காண்டத்தை நிலைக்கச் செய்தது.

"ஒன்று தானே உள்ளது; அதுவே கடவுள். கடவுள் இரண்டு இல்லை; ஒன்றுதான். கடவுள் ஒன்றாயிருப்பதால் கடவுளுக்கு வேறாக இரண்டாவது பொருள் இல்லை என்பது பெறப்படாது" என்றார் மெய்கண்டதேவநாயனார். "சும்மா இராதே, தொழில் செய்" என்கின்றது கீதை. "அவன் எடுத்துச் சுமப்பான்; நீ சும்மா இரு" என்கின்றது சைவசித்தாந்தம். இருவினைகளையும் "இருள்சேர் இருவினைகள்" என்கின்றனர் திருவள்ளுவ நாயனார். எடுத்துச் சுமப்பவன் செய்யாமையைச் செய்கின்றான்; அந்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்றலரிது.

இந்தச் சைவசித்தாந்த ஞான காண்டம் கர்ம காண்டம் சங்கரருக்குத் தெரியாதன அல்ல. இவை அக்கால உலகில் பௌத்தத்தை மறையச் செய்ய எடுத்தாள முடியாத உண்மைகள் ஆகலாம். இது ஆராய்தற் குரியது ; சரித்திரக் கண்கொண்டு நோக்கற் பாலது.

காந்திஜி வினோபாஜி ஆகியோர் வருணாசிரம தர்மங்களைக் கண்டிக்கவில்லை ; வருணாசிரமம் குழம்பித் தலைகால் தெரியாமற் கிடக்கிறபடியால் மற்றொரு ஸ்மிருதி வகுக்கத் துணிந்தார்கள் ; அதிற் பிழை வரலாம் ; சரிவரலாம். உலகம் புதிய ஸ்மிருதியை ஏற்றுக் கொண்டு வருணாசிரம தர்மங்களைக் கண்டித்துத் தள்ளுகின்றது. இது புதிய ஸ்மிருதி கர்த்தாக்களின் கருத்தன்று. அவர்களுக்கு வருணாசிரம தர்மம் உயர்ந்த தென்பதே கருத்து.

சிவபூஜா துரந்தரரும் மகா பக்தரும் நுண்மதியினருமான சங்கரருக்குச் சைவ சித்தாந்த உண்மையே உயர்ந்த பொருள் ஆகலாம் ; ஆனால், அவர் வகுத்த கர்மஞானங்களே அக்காலத்துக்கு ஏற்றனவாய் அவர் விரும்பிய பயன் அளிப்பன ஆகலாம். கதை நீளுகின்றது, எடுத்த விஷயத்துக்கு வருவோம்.

ஏகாத்மவாதம் போதிப்பது சங்கர பாஷ்யமேயன்றி, வியாச சூத்திரம் அன்று. பிற்காலத்துள்ளவர்கள் ஏகாத்ம நூல் செய்தான் வியாசன் என்று, வியாச முனிவரையுந் தாக்கத் தொடங்கிவிட்டார்கள்.

வேதங்களை வகுத்தவரும், பதினெண் புராணங்கள் சொன்னவரும், மகா பாரதந் தந்தவருமான வியாசரை விலகியும் ஒரு சமய நூல் உண்டோ! வியாசர் ஏகாத்மவாதம் செய்தார் என்று சொல்லுவது பெரிய அநியாயம். இக்காலத்திலே பிராமணத் துவேஷமுள்ளவர்கள் பிராமணர்கள் ஓதுகின்ற வேதத்திலும் பாய்வது போலச் சங்கர பாஷ்யத்தோடு கிடந்த வியாச சூத்திரத்தையும் வியாசரையும் தாக்குவது தள்ளுவது பெரியதொரு அறியாமை. "தேவர் குறளும்" என்ற ஔவையார் வாக்கில் வருகின்ற "முனிமொழியும்" என்ற தொடரில், முனி என்பதற்கு வியாச முனிவர் என்ற பரம்பரை உரையைக் கைவிடுத்து, வாதவூர் முனிவர் என்றுகூட உரைகூறுகின்றனர்.

"ஏத்திடு சுருதிகள்" என்ற கச்சயப்ப சிவாசாரிய சுவாமிகளின் பாட்டு அறியாமை என்ற அந்தகாரத்தைப் போக்கி வியாச முனிவரின் பெருமையைக் கிரிதீபம் போல எடுத்துக் காட்டுகின்றது. அந்த அருமருந்தன்ன பாட்டுத்தான் ஒப்புயர் வில்லாத சுத்தாத்வைத சைவ சித்தாந்த பாநுவாகிய ஒரு செந்திநாதையரைச் சிருஷ்டி செய்து நமது யாழ்ப்பாணத்துச் சைவசித்தாந்த கலாசாரம் இறந்துபடாமல் பாதுகாத்தது. அந்த அற்புத வரலாற்றை இனி நோக்குவோம்.

———

# சைவசித்தாந்த கலாநிதி செந்திநாதையர்

வியாச பகவான் அருளிய பிரமசூத்திர பாஷ்யங்களுக்குள்ளே மிகப் பிரசித்திபெற்று விளங்குவது சங்கர பாஷ்யம். இது மூலநூலாகிய பிரம சூத்திரத்தையே விழுங்கி விட்டது.

"வியாச பகவான் சங்கரபாஷ்யத்தைப் படித்துத்தான் தமது சூத்திரங்களின் உண்மைக் கருத்துக்களைச் செவ்வனே அறிந்தார்'' என்று ஒரு கதை கட்டி நடத்திஞல் அதை எடுத்துச் சுமக்க எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் முன்வருவார்கள்.

அவ்வளவு தூரம் சங்கரபாஷ்யத்துக்கு ஆதிக்கம்; பாஷ்யமோ ஏகாத்மவாதபரமானது.

பிராமணர்களுள்ளே ஸ்மார்த்தப் பிராமணர்கள் பெரும்பான்மையினர். இவர்களுடைய விவேகம் மேலைத்தேசத்து யூதர்களின் விவேகத்தினும் மிஞ்சியது. இவர்களுக்கு எட்டாதது என்று ஒன்றில்லை. செல்வம் அதிகாரம் உத்தியோகம் என்ற யாவும் படைத்தவர்கள் ஸ்மார்த்தர்கள். அரசாங்கமே அவர்களின் கைப்பம்பரம் என்று சொல்லிவிடலாம். இப்படிப்பட்ட ஸ்மார்த்தப் பிராமணர்கள் சங்கர பாஷ்யத்தை அக்ஷரம் அக்ஷரமாய் ஒப்புக்கொள்ளுபவர்களாயே இருப்பார்கள்; வியாசரிலும்பார்க்கச் சங்கரரையே மதிக்கிறவர்கள். சங்கரர்கொண்ட உபநிஷதப் பகுதிகளைக் கொள்ளுவதன்றி ஏனைய வேதப்

பகுதிகளையோ சைவாகமங்களையோ இவர்கள் கொள்ளுவதில்லை. தேவார திருவாசகங்களுக்கே அதிகம் மதிப்புக்கொடார்கள்.

பிராமணர்களுள்ளே ஆதிசைவர் ஒரு பகுதியார். அவர்களே முப்பொழுதுந் திருமேனி தீண்டுதற்குரியார்; கோயில்களில் பூசைசெய்தற்கு அருகதை உள்ளவர்கள். காலக்கிரமத்தில் இவர்கள் நிலை படுமோசமாய்ப் போகவே ஸ்மார்த்தர்களின் நிலை வர வர அதிகாரத்தில் மேலோங்கியது; படித்தவர்களும் அவர்களே. அதனாலே, ஆதிசைவர்களும் மெல்ல மெல்ல ஸ்மார்த்தர்களானார்கள்.

பெரியபுராணத்திலே விதந்து பாராட்டப்பட்ட தில்லைவாழ் அந்தணர்களின் சந்ததியார் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற இப்பொழுதைய தில்லை வாழ் அந்தணர்களிற் பெரும்பான்மையோர்களே ஸ்மார்த்தர்களாய் விட்டார்கள். சிவதீக்ஷை பஞ்சாட்சரசெபம் ஆகிய இவற்றுக்குப் புறமாய்விட்டார்கள். பதஞ்சலி மகாமுனிவர் சிவாகம முறைப்படி வகுத்த பத்ததியாகிய சிதம்பராலய பூசைக் கிரமத்தையே மாற்றி அமைத்துவிட்டார்கள்.

இந்த அக்கிரமத்தை,

> "வேதக் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் உதித்த
> போதக் காட்சிக்குங் காணலன்".

> "சுத்தவாதுள முதலிய தந்திரத் தொகுதி
> உய்த்துணர்ந்திடு நீரரே ஒரு சிறிதுணர்வார்"

என்று முழங்குகின்ற கந்தபுராணத்தில் ஊறிய ஆறுமுகநாவலர் கண்டார்; கொதித் தெழுந்தார்;

சிவதீக்ஷை யில்லாத தில்லைவாழந்தணரிடம் விபூதி வாங்க மறுத்தார். அதனுல் விளைந்த சரித்திரம் ஒரு சமுத்திரம். அதில் ஒரு துளிதான் பெரியபுராண முகப்பில் உண்மை நாயன்மார் மகிமையில் வருவது. அத்துளி வருமாறு:

"இக்காலத்து ஸ்மார்த்தப் பிராமணருள்ளே பலர் அறுபத்து மூன்று நாயன்மாரை வழிபடக் கூசுகின்ருர்கள்; அவர்களுடைய உற்சவங்களிலே வேதபாராயணஞ் செய்ய மறுக்கின்ருர்கள்; அவர்களுடைய அருமை பெருமைகளைச் சிறிதும் சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்ருர்கள். ஐயையோ! இது எவ்வளவு அதிபாதகம்! அநபாய சோழமகாராஜா பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனுரை யானைமீதேற்றித் தாமே வெண் சாமரம் வீசி நகர்வலஞ் செய்வித்தபொழுது, தில்லை வாழந்தணர்கள் வேதபாராயணஞ் செய்துகொண்டு வந்தார்கள் என்று உமாபதிசிவாசாரியர் சேக்கிழார் புராணத்திற் கூறியிருக்கின்ருரே. அங்ஙனமாகவும், அப் பெரியபுராணத்திற் கூறப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய உற்சவங்களிலே வேத பாராயணஞ் செய்யலாகாதென்று சிறிதும் பழிபாவங் கட்கு அஞ்சாது பிதற்றுதல் எவ்வளவோரறியாமை!

"மாங்கல்யத்தைத் தரித்துக்கொண்டு தங்கள் தங்கள் நாயகருக்குத் துரோகம்செய்து இல்லொழுக்கிழந்த பெண்டிர்கள்போல விபூதிருத்திராட்சங்களைத் தரித்துக்கொண்டு அச்சின்னங்களுக்குரிய சிவபெருமாஞேடு பசுக்களைச் சமமெனக் கூறியும், சிவவாக்காகிய சிவாகமங்களை நிந்தித்தும், அச்சிவபெருமா

னுக்குத் துரோகிகளாய் ஒழுகும் இவர்கள் மற்றை எப்பாதகந்தான் செய்யக் கூசுவார்கள்! ஐயையோ! இச் சிவத்துரோகிகளை நம்முடைய சைவசமயிகள் வணங்குதலும், இவர்களிடத்தே புசித்தலும், இவர்களை விவாகம் சிராத்தம் முதலிய கருமங்களிலே தான பாத்திரமாகக் கொண்டு தாம் வருந்தித் தேடிய பொருள்களைப் பாழுக்கிறைத்து எரிவாய் நரகத்துக்கு இரையாதலும் எவ்வளவு அறியாமை!

"ஓ! சைவசமயிகளே சைவசமயிகளே! உங்கள் எதிரே அறுபத்துமூன்று நாயன்மார்களை நிந்திக்கும் ஸ்மார்த்தர்களைக் காணுந்தோறும் இந்த ஐந்து வினுக்களைக் கேட்டு அவர்களைத் தலைகுனிவித்து அவர்கள்வாயை அடக்குங்கள். அவ்வினுக்கள் இவை:

(1) "ஓ ஸ்மார்த்தர்களே, உங்கள் மததாபகராகிய ஆசாரியர் சங்கராசாரியரோ அன்ருே?

(2) சௌந்தரிய லகரியும் சிவானந்த லகரியும் சிவபுஜங்கமும் உங்கள் சங்கராசாரியர்செய்த கிரந்தங்களோ அன்ருே?

(3) அறுபத்து மூன்று நாயன்மார்களுள்ளே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரைச் சௌந்தரிய லகரியிலும், கண்ணப்ப நாயனுரைச் சிவானந்தலகரியிலும், இயற்பகை நாயனுரையும் சிறுத்தொண்ட நாயனுரையும் சிவபுஜங்கத்திலும் உங்கள் சங்கராசாரியர் துதித்திருக்கின்ருரோ அன்ருே?

(4) உங்கள் குருவாகிய சங்கராசாரியராலே துதிக்கப்பட்ட நாயன்மார்களை நீங்கள் நிந்தித்தலி

ஞலே அச்சங்கராசாரியரிடத்திலே அறியாமையை ஏற்றிக் குருநிந்தகர்கள் ஆனீர்களோ அன்ரே?

(5) அறுபத்துமூன்று நாயன்மார்களை வணங்கும் பிராமணர்கள் பதிதர்களாவரெனச் சொல்லும் நீங்கள் அவர்களைத் துதிக்கும் சங்கராசாரியரைப் பதிதர் எனச் சொல்லாதுசொல்லி அவரை நீங்கள் வணங்குதலாற் பதிதரிற் பதிதர்களாயினீர்களோ அன்ரே?

"அகத்தியன் சனகன் முன்னோர்
அத்திரி வசிட்டன் என்பான்
சகத்துயர் பிருகு மேலாந்
ததீசி வெஞ்சாபத் தீயோன்
பகைத்திடு புலத்தை வென்ற
பராசரன் இனைய பாலார்
மகத்தினை யிகழா வீண்டு
வருகிலர் போலும் என்ருர்".

உத்தமோத்தம பிராமண இருடிகளான அகத்தியர் முதலியவர்கள் தக்கனுடைய யாகத்துக்குப்போக மறுத்துவிட்டார்கள். தக்கனுடைய யாகம் சிவபெருமானை நிந்திக்கின்ற வரிசைதவறிய யாகம். அதனாலே அந்த முனிபுங்கவர்கள் அங்கேபோகக் கூசிவிட்டார்கள். ததீசி முனிவர் மாத்திரம் மனங் கேளாமல் அங்கே போய், அந்தத் தக்கனுக்கு எத்தனையோ புத்திமதிகள் கூறினர். அவன் கேட்கவில்லை. அவருக்குக் கோபம் வந்துவிட்டது. அவனைச் சபிக்கின்ருர். சபித்த பிறகு,

"அங்கணுறு மறையோர் தம்முகநோக்கி
அந்தணரில் அழிதூ ஆனீர்

உங்கள் குலத்தலைமைதனை இழந்திட்டீர்
கேண்மினெனை உரைக்கலுற்ருன்''

(அழிதூ—பேடி)

"பேசரிய மறைகளெல்லாம் பராபரனீ
எனவணங்கிப் பெரிது போற்றும்
ஈசனையும் அன்பரையும் நீற்றெடுகண்
டிகையினையும் இழந்து நீவிர்
காசினியின் மறையவராய் எந்நாளும்
பிறந்து இறந்து கதியுருது
பாசமத னிடைப் பட்டு மறை உரையா
நெறி யதனிற் படுதிர் என்ருன்."

"மறையோர்களே, நீங்கள் தக்கன் யாகத்தில் பங்கு பற்றுவீர்களாளுல், மறைநெறி திறம்பிப் பூமியிற் பிறந்து இறந்து உழலக்கடவீர்கள்" என்று ததீசி முனிவர் சபிக்கின்ருர்.

முனிவர்களின் சாபத்திளுலோ வேறு எந்தக் கர்மத்திளுலோ அறியோம், இந்தப்பூமியிலே "மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதத்துள்" அகப்பட்டு ஏகாத்மவாத வலையுட் சிக்குண்ணுத பிராமணர்கள் விரல் மடித்து எண்ணத்தக்க ஒரு சிலரே.

ஒரு கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்,

"சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி
உய்த்துணர்த்திடு நீரரே ஒருசிறி துணர்வார்"

என்று அருளினர்.

ஒரு அருணந்தி சிவாசாரியர்,

"நானே பிரமம் என்றுரைத்து
ஞாலம் பேய்த்தேர் என எண்ணி
ஊனே புகுந்து நின்றுயிர்கட்
குபதே சங்கள் உரைத்து வரும்
மாஞ மதிகே டனுமாய
மாயா வாதி பேயாகித்
தானே உரைக்கும் அந்நூலின்
உண்மை தன்னைச் சாற்றுவாம்"

என்று அருளிச் செய்தார்.

ஒரு உமாபதி சிவாசாரியர்,

"நான் பிரமம் என்பவர் பால்
நண்ணுதே"

என்று அருளிச்செய்தார். இந்தக் காலத்திலே இந்த மகான்கள் கூற்றுக்களைச் சிந்தித்துத் தெளிகின்றவர் எத்தனை பேர்!

நான் பிரமம் என்பார் பால்
நண்ணுதார் யார்?

இந்த யாழ்ப்பாணத்திலே ஒரு செந்திநாதையர் சிந்திக்கத் தொடங்கினர். "ஏத்திடு சுருதிகள்" என்ற பாடலிலே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளாலே பாராட்டப்பட்ட வியாச பகவானுக்கும் சங்கரருக்கும் தொடர்புண்டா? என்று அவருடைய ஆராய்ச்சி தொடங்கியது. பிரமசூத்திரத்துக்கும் சங்கர பாஷ்யத்துக்கும் தொடர்பு இல்லை என்ற முடி

புக்கு அவர் வந்தார். தம் உடல் பொருள் ஆவி மூன்றனையும் இந்த ஆராய்ச்சிக்கே அர்ப்பணஞ் செய்தார் என்பதில் எள்ளளவேனும் சந்தேகம் இல்லை.

செந்திநாதையர் காசி வாசியாய் அங்கே சம்ஸ்கிருத மகா பண்டிதர்களின் மத்தியிலிருந்து பிரம சூத்திரத்துக்குச் சங்கரரும் பிறரும் வகுத்த பாஷ்யங்களை எழுத் தெண்ணிப் படிததார். நீலகண்ட சிவாசாரியர் பிரமசூத்திரத்துக்குச் செய்த பாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்ப்புஞ் செய்தார். அன்றி, சங்கரர் பத்து உபநிஷதங்களுக்குச் செய்த வியாக்கியானங்களையும் படித்தார். படித்த பிறகு அந்த மகான் செய்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளே,

1. நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பு.
2. சிவஞானபோத வசனலங்கார தீபம்.
3. சைவ வேதாந்தம்.
4. தேவாரம் வேதசாரம்.

5. வைதிக சுத்தாத்துவித சைவ சித்தாந்த தத்துவப்படம்; அதுபற்றிய வினவிடை, என்னும் நூல்கள்.

இவற்றுள், நீலகண்ட பாஷ்ய முகப்பில், இரு நீண்டஉபக்கிரமணிகைகள் தந்திருக்கின்றார். ஒன்று உபநிடத உபக்கிர மணிகை; மற்றது பிரம சூத்திர உபக்கிர மணிகை. இவை இரண்டும் சைவசித்தாந்த கலாசாரமாகிய சரபத்தின் இரு சிறகுகள் என்றே வருணிக்கத் தக்கவைகள். ஒவ்வொன்றும் தனித் தனி கோடி பொன் பெறும்.

வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் இதிகாசங் கள் ஸ்மிருதிகள் திருமுறைகள் சாத்திரங்கள் எல் லாம் ஆராய்ந்து ஆக்கப்பட்டவைகள் அந்த உபக் கிர மணிகைகள். ஆயிரக்கணக்கான வருஷமாக ஏகாத்மவாதிகள் சைவ சித்தாந்த கலாசாரத்தைச் சிதைக்கச்செய்த அடாத செயல்களை அந்த உபக்கிர மணிகைகள் கையும் மெய்யுமாக எடுத்துக் காட்டு கின்றன. இந்த உபக்கிர மணிகைகளும், ஐயர் அவர்களின் தத்துவப் படமும் அதன் விளக்கமும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் கலங்கரை விளக்கங்கள் என்றே சொல்ல வேண்டும் இவற்றுள், தத்துவப் பட விளக்கத்தில் வரும் ஒரு அடிக் குறிப்பும், சைவ சித்தாந்தத்தில் ஒரு குறிப்பும், சைவ வேதாந்தத்தில் ஒரு குறிப்பும், ஐயர் அவர்கள் இயற்றிய கந்தபுராண நவநீதத்தில் வரும் ஒரு குறிப்பும் மிகமிக இன்றி யமையாதவைகள்; ஐயர் அவர்கள் நமது கலாசா ரத்துக்குச் செய்த அரும் பெரும் முயற்சியைக் காட் டுபவைகள்.

# செந்திநாதையர் நிறுவிய உண்மை

"பற்றிய தொடர்பையும் உயிரையும் பகுத்து
இற்றென உணர்கிலம் ஏதந் தீர்கிலம்
சிற்றுணர் வுடையதோர் சிறியம் யாமெலாம்
உற்றுள தாடலை உணர வல்லமோ"

(பற்றிய தொடர்பு — உடம்பு)

"எடுத்த உடம்பின் வேருக உயிரைப் பிரித்து உணர முடியாதவர்களா யிருக்கின்ருேம். இப்படிப் பட்ட சின்னஞ் சிறிய அறிவுடைய நாமா, உயிர்க் குயிராய் இருக்கின்ற பெருமானே, உன்னை வேறு வகுத்து உன்னியல்புகளாகிய திருவிளையாடல்களை உணர வல்லோம்" என்று திருவிளையாட்டயர்கின்ற முருகப் பெருமானை நோக்கி இந்திரன் முதலிய தேவர்கள் கூறித் துதிக்கின்ருர்கள்.

"ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்—உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந் தோம்" என்கின்ருர் மணிவாசகப் பெருமான்.

உயிர்களோடு ஒன்ருயும் அதே சமயத்தில் வேருயும், அவ்விரண்டு நிலைகளோடும் அமையாமல் உடனுயும் நின்று இறைவன் உயிர்களுக்கு உபகரிக் கின்ருன்; இவ்வாறு மூவகை உபகாரங்களையும் உயிர்களைவிட்டு விலகாமல் நின்றே உபகரிக்கின் ருன். இவ்வித மூவகை உபகாரங்களினுலும் உயிர் களுக்கு அறிவு இச்சை தொழில்கள் விருத்தி உறு

கின்றன. விட்டு விலகாமல் மூவகையாக இறைவன் உயிர்களுக்கு உபகரிக்கும் இந்த நிலைக்கு "அத்து விதம்" என்று வேதங்களிற் பெயர்.

உபநிடதங்கள் இறைவனுடைய ஒவ்வொரு நிலையையும் தனித்தனி எடுத்தாராயும். வேத இருஷி களாகிய சாதகர்கள் ஒரு நிலையைக் காணுதற்கு யுகம் யுகமாய்த் தவங்கிடப்பார்கள்.

இந்தச் சரீரத்திலே மூக்கு இருக்கிறது, காது கண் ஆகிய உறுப்புக்களும் அதேசரீரத்தில் இருப்பது விரோதமன்று. இவ்வாறே இறைவனுடைய மூவகை நிலையுள், ஒரு நிலை மற்றைய இருவகை நிலைக்கும் விரோதமன்று. ஒரு நிலை நிகழ்ந்து கொண்டிருக்கும் போதே ஏனை இருநிலையும் நிகழ்ந்து கொண்டிருக் கும். சாதகன் மூவகை நிலையையும் ஒருங்கு காணும் சக்திமான் அல்லன்; ஆகையினாலே, முதலில் ஒரு நிலையைக் காணச் சாதனை செய்வான்; அதற்கு உப நிடதம் வழிகாட்டும். அதனாலே, மற்று இருவகை நிலையும் இறைவனுக்கு இல்லை என்ற கருத்து ஆகாது.

இறைவன் படைக்கும் போதே ஏனைய தொழில் களும் நிகழ்ந்து கொண்டிருக்கும். படைத்தலைக் காணச் சாதனை செய்வோன் ஏனைய தொழில்கள் இல்லை என்று சொல்ல மாட்டான்.

இறைவன் உயிர்களை விட்டு விலகாத மூவகை நிலைகளை அடக்கியதுதான் அத்துவிதம். இதுதான்,

"பொய்கண்டார் காணாப் புனிதமெனும்
அத்துவிதம்"

"இந்தச் சரீரத்திலே மூக்கிருப்பதனுலே, ஏனைய கண் காதுகள் இதே சரீரத்தில் இருப்பது சாத்தியம் ஆகாது" என்று ஒருவன் முடிபு கட்டுவான்; ஆனுல் அவன் கண்டது மூக்கே ஆகாது அவன் கூற்றுச் சரீச சாத்திர விரோதமானது. இவ்வாறே, இறைவன் "உலகெலாம் ஆகி ஒன்ருய்" இருப்பதனுலே, "வேருய் உடனுய் இருப்பது" சாத்தியமாகாது என்று ஒருவன் முடிபு கட்டுவான். ஆனுல், அவன் "ஒன்ருய்" இருக்கும் நிலையைக் கண்டவன் அல்லன். அவன் கூற்று வேத விரோதம்; அவைதிகம்.

"தோள் கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்
தடக்கை கண்டாரும் அஃதே"

என்றவாறு, இறைவனின் ஒவ்வொரு நிலையை ஏனைய நிலைகளோடு விரோதித்துப் பிறழ உணர்ந்து, எத்தனையோ அவைதிக சமயங்கள் சாதிக்கப்பட்டிருக்கின்றன.

ஏகாத்ம வாதம் உள்பொருள் ஒன்றே என்று சாதிக்கும்; 'வேறு, 'உடன்' என்னும் நிலைகளை அது மறுக்கும். இவ்வாறே மற்ருெரு நிலையை எடுத்துக் கொண்டு, ஏனைய இரு நிலையை மற்ருெரு அவைதிக மதம் மறுக்கலாம்.

முதலை நரியின் காலென்று புங்கம் வேரை இறுகப் பிடித்துக் கொண்டது; அவ்வளவோடு அமையாமல் நரியின் காலை மறுக்கவுந் தொடங்கி விட்டது. இறுகக் கடித்த அதனுலே தன் முரசிலிருந்து வந்த

இரத்தத்தையே புங்கம் வேரிற் கண்டு, அதைக் காட்டிப் புங்கம்வேரை நரியின் கால் என்று ஸ்தாபிக்கவும் தொடங்கிவிட்டது. அதே சமயத்தில் நரியின் காலில் இரத்தம் பெருகாமையால் அதுதான் புங்கம் வேர் என்று பிரசண்ட மாருத கண்டனமுந் தொடங்கி விட்டது இப்படி முதலை "முதலை மதம்" என்று ஒரு மதம் படைத்துக் கொண்டது.

இந்த முதலை போலவேதான் அவைதிக மத வாதிகளும் சும்மா கிடக்கவில்லை. தம் மதங்களை நிறுவும் பொருட்டுத் தம் கொள்கைக்கு மாறுன சாத்திரங்களையும் உபநிடத வாக்குக்களையும் சிதைத்துத் திரித்துத் சித்திரவதை செய்து எத்தனையோ கிருத்தியம் பண்ணி விட்டார்கள். ஏட்டுக்காலம் இந்தந் திருக்கூத்துக்களுக் கெல்லாம் மிக மிக வாய்ப்பு. வல்லவர் பம்பரங்கள் மணலிலும் ஆடின.

இந்த அக்கிரமங்களை அஞ்சாது நடு நின்று வெளிப்படுத்தியதுதான் செந்திநாதையர் அவர்கள் செய்த விலைமதிக்க முடியாத வேலை.

ஐயர் அவர்கள் மெய்கண்டதேவநாயனுர் அருளிய "அத்துவித உண்மை" ஆகிய சைவசித்தாந்த கலாசாரத்தைத் தேவாரம் திருவாசகம் திருமந்திரம் முதலிய திருமுறைகளுக்கும் வேத உபநிடதங்களுக்கும் சிவாகமங்களுக்கும புராண இதிகாசங்களுக்கும் ஏனை அங்க நூல்களுக்கும் விரோதிக்காத முறையில் உய்த்துணர்தற்கு, வழியில் உள்ள கல்லுகள் முள்ளுகள் செடிகளை யெல்லாம் அகற்றி வழி வகுத்திருக்கின்றுர்கள்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு"

என்ற திருக்குறளை ஐயர் அவர்களுக்குச் சமர்ப்பித்து விட்டு, நமது கலாசாரத்தைக் காக்க அவர்கள் செய்து வைத்திருக்கும் உதவிகளை உணர்தற்கு உபகாரமாக, அவர்கள் இயற்றிய வைதிக சுத்தாத்து வித சைவசித்தாந்த தத்துவப்பட வினாவிடை என்னும் நூலில், 130-ம் வினாவிடையின் அடிக்குறிப்புப் பின்வருமாறு :—

"A என்பானுடைய வைரிகளாகிய BCD என்பார் தங்களுள்ளே தாங்கள் ஒற்றுமை இலராய விடத்தும், அந்த A என்பானுடைய சொந்த ஆஸ்தியாகிய நிலத்தைத் தம்முடையதாக்கத் துணிந்து, அந்நிலத்திலே A என்பானுக்குரிய வென்று உணர்தற்கு நாட்டப்பட்டிருந்த எல்லைக் கற்களைப் பிடுங்கியும், கள்ளச் சாசனங்கள் பிறப்பித்தும், அந்நிலம் அந்த A என்பானுக் குரியதாகாதவாறு செய்தும், அந்நிலமுடையானைத் தூஷித்தும், அந்நிலத்தைத் "தம்முடைய ஆஸ்தி" "தம்முடைய ஆஸ்தி" "பொதுவாகிய ஆஸ்தி" என்று நெடுங் காலமாய் எழுதியும் பேசியும் ஆண்டுவருவாராக, அதைக் கண்ட A என்பானுடைய சந்ததியாரும் பந்துக்களும் சிநேகிதரும் அந்த BCD என்பாருடைய வமிசத்தாரும், அவரைக் கதாநுகத நியாயமாகத் தொடர்ந்து நிற்பாரும் அந்நிலம் A என்பானுடையதன்று; BCD என்பார்க்குப் பொதுவாகிய ஆஸ்திபோலும் என்று நம்பியும் சொல்லியும் எழுதியும் வந்த காலத்தில், அந்த A என்பவன் சந்ததியார் மேற் பற்றுடையான்

ஒருவனுக்குச் சிற்சில குறிகளால் அந்நிலம் A என்பானுக் குரியதென உண்மை புலப்பட்ட விடத்து, BCD என்பார் இன்ன இன்னவாறு மோசஞ்செய்து, அந்த A என்பானுடைய நிலத்தைக் கவர்ந்துகொண்டார் என்றும், A என்பவனுடைய ஆஸ்தி என்றதற்குப் பிரமாண சாசனம் இன்னது இன்னது என்றும் காட்டி, அந்த A என்பானுக்கே அந்நில முரித்தென்று நீதிஸ்தல வாயிலாகத் திருடீகாரஞ் செய்து காட்டிவிட்டாற் போல, ஈசகேநாதி உபநிடதங்களும் பிரமசூத்திரங்களும் வைதிக சைவருடைய சொந்த ஆஸ்தியேயாக, அவ்வாஸ்திக் குரியராய் அதைப் பராமரித்தற்குப் பூரண அதிகாரிகளாயுள்ள "முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்" எனப்படும் ஆதிசைவப் பிராமணர் திருமேனி தீண்டுதலிலே தங்கால முழுமையும் போக்கிப் பராக்காயிருந்தாராக, ஆதிசைவருள்ளும் பெரும்பான்மையும் படித்தவர் இலாது அரியராய்விட, அவ்வாய்ப்பாகிய சமய முணர்ந்த ஏகான்மவாதாசாரியரும், வைணவாசாரியரும், மத்துவாசாரியருமாகிய மூவரும் அவ்வுபநிடத பிரம சூத்திர ஆஸ்தி வைதிக சைவர்க்குரியதன்றென்று, அவ்வாஸ்திக் குரியராகிய ஆதிசைவரை அலட்சியஞ் செய்தும், பிரமகீதை முதலிய கள்ளச் சாசனங்கள் பிறப்பித்தும் உபநிடதம் பிரமசூத்திரம் என்பன "தம்முடைய" "தம்முடைய" என்றும், "பொது உபநிடதம்" என்று காட்டியும், நாட்டியும், எழுதியும், பேசியும் பிரசங்கித்தும் வந்தாராக; அதைக்கண்ட ஆதிசைவரது வமிசத்தாரும் சிவன்மேற் பற்றுடைய பிறரும் அவர்கள் கூறுவது மெய்போலுமென்று மனவருத்தத்தோடு தம்மீது ஏற்றுந் தூற்றுதல்களையுஞ் சகித்துக் கொண்டு வந்த காலத்தில், திருவருள்

10

உணர்த்தினமையாற் போலும், ஏகான்மவாதாசாரியர் முதலாயினோர் உபநிடதங்களுக்கும் பிரம சூத்திரங்களுக்கும் உரைத்த உரைகள் ஒவ்வாவென்றும், அவ்வுபநிடத சூத்திராதிகளுக்குப் பொருளாக ஸ்ரீநீலகண்ட சிவாசாரியரும், ஸ்ரீஅரதத்தாசாரியாரும், ஸ்ரீ அப்பயதீக்ஷிதரும், ஸ்ரீ வேதவியாசரும், சிவபெருமானும் முறையே அருளிய பிரமசூத்திர பாடியங்களும், சதுர்வேத தாற்பரிய சங்கிரகமும், சிவார்க்க மணி தீபிகையும், சிவபுராணங்களும், சிவாகமங்களும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் திருநாவுக்கரசு நாயனுர் சுந்தரமூர்த்தி நாயனுர் மாணிக்கவாசக சுவாமிகள் வைதிக சைவ சமயஸ்தாபனுசாரியர்களும் (மெய்கண்டார் முதலிய சந்தானுசாரியர்களும்) அருளிய திராவிடவேத (சித்தாந்த) சாஸ்திரங்களும் பிரமாணமாம் என்றும், அதனுல் அவ்வுபநிடத பிரமசூத்திரம் வைதிக சைவர்களுடைய சொந்த ஆஸ்தியாம் என்றும் எமது "சிவாத்துவித சைவபாடியத் தமிழ் மொழிபெயர்ப்பு" க்கு முதற் கண்ணே வலிய பெரிய கோபுரமாய் நின்ற "உபநிடத உபக்கிரமணிகை" "பிரமசூத்திர உபக்கிரமணிகை" களில் விரித்து உலகினர் நீதிஸ்தலத்திலே திருடீகாரஞ் செய்து நிருபித்திருக்கின்றேம். ஆண்டுக்காண்க,"

---

# சூதசங்கிதையில்

# ஏகாத்மவாதிகளின் விளையாட்டு

செந்திநாதையர் அவர்கள் கந்த புராணத்தைப் பல நூறுதரம் பயின்று, "கந்தபுராண நவநீதம்" என்னும் அருமையான நூலைச் செய்தார். நவநீதம் என்றால் வெண்ணெய் என்று பொருள். கந்த புராணமாகிய பாற் சமுத்திரத்தில் திரண்ட - திரட்டிய வெண்ணெய் என்று கருத்துக் கொள்ளலாம்.

இந்நூல் சமயப் பிரகரணம் தொடக்கம் பக்திப் பிரகரணம் இறுதியாக எட்டுப் பிரகரணங்கள் கொண்டது. அவற்றுள், சமயப் பிரகரணத்தில் உள்ள ஓர் அடிக்குறிப்பு நவநீதத்துள் நவநீதம் என்று சொல்லத்தக்கது. அது நமது கலாசாரத்தின் தூய நிலையைப் புலப்படவைப்பது. அக்குறிப்பு வருமாறு :-

"கந்த புராணத்திலே இரண்டு சகோதர ஞானிகளின் கதை சொல்லப்படுகின்றது. ஒரு ஞானி தமையன்; மற்றவன் தம்பி. தமையன் பிரமமொன்றொழிந்து மற்றெல்லாம் பொய்யென்றும், தம்பி உலகமொன்றொழிந்து மற்றெல்லாம் பொய் யென்றும் கோடலினால் அவ் விருவர்க்கும் எவர்களாலும் விரும்பற் பாலனவாகிய இரக்கம் வாய்மை கொடை முதலிய புண்ணியங்களிலே விருப்புமில்லை; கொலை செய்தல் களவெடுத்தல் கள்ளுண்ணல் மாமிசம் புசித்தல் பொய்ச் சாட்சி சொல்லல் பிறன்மனை விழைதல் வரைவின் மகளிர் விழைதல் முதலிய பாவங்களிலே

வெறுப்புமில்லை. அவ்விருவர்க்கும் கீழும் மேலும் பொய்யாதலினல் நாடவேண்டிய தொரு பொருளும் இல்லை. ஆசாரமாயிருக்க வேண்டு மென்றேனும், தவஞ் செய்ய வேண்டு மென்றேனும், விரதங்கள் அநுட்டிக்க வேண்டுமென்றேனும், பிரமசரியம் முதலிய நிலைகளில் நிற்க வேண்டு மென்றேனும், சிவனுடைய உருவத்திருமேனியைத் தியானிக்கவேண்டு மென்றேனும், சித்தமல மறுத்தல் வேண்டுமென்றேனும், மனசை விடயங்களின் வழியே செல்லாது தடுத்தல் வேண்டுமென்றேனும், கருத்து நிகழாமையினலே தமையன் ஞானியும் தம்பி ஞானியும் ஒப்பாராவார். தமையன் ஞானி மாயாவாதி; தம்பி ஞானி உலகாயதன். மாயாவாதி பசுஞானி, ஆன்மா பிரமம் என நிற்றலால். உலகாயதன் பாசஞானி ஆன்மா உலகம் என நிற்றலால். பசுஞானி புறச்சமயி; பாசஞானி புறப்புறச்சமயி. பசுஞானம் அசுரனுக்கு அசுர குருவாகிய சுக்கிரனல் உபதேசிக்கப்பட்டது; பாசஞானம் சுரனுக்குச் சுரகுருவாகிய பிரகஸ்பதியால் உபதேசிக்கப் பட்டது பசுஞானம் சுக்கிர னுபதேசத்தாலே பெறப்படும்; பாசஞானம் இந்திரபுரிப் படலத்தினலே பெறப்படும். இவ்விரு ஞானமும் இவ்விரு திறத்தார்க்கும் இவ்விரு குரவராலும் பக்குவ நிலைக்கியையப் போதிக்கப் பட்டன. சிவமந்திரம் அசுரனுக்கு உபதேசிக்கப்பட்ட போது அவனுக்கு,

> "போய் கோலை களவு காமம் புன்மைகளுறுமே
> போற்றிச் செய்குதி தவத்தை" என்றும்,

அவனுக்கே பசுஞானம் உபதேசிக்கப்பட்ட போது,

"கொலையோடு களவு காமம் குறித்திடு வஞ்சமெல்லாம்
நிலையெனப் புரிதி" என்றும்,

சுக்கிரன் உரைத்தமையால் சமய தீக்ஷை விசேஷ தீக்ஷை நிருவாண தீக்ஷை பெற்றுச் சிவபெருமானுடைய ஞானனந்த வடிவாகிய திருவடியை நாடி நிற்கும் மெய்யன்பர்களாகிய சைவர்களுக்கு மாயா வாத நெறியையும், அந் நெறியைப் போதிக்கும் ஞானவாசிட்டம், வாசுதேவ மனனம், பஞ்சதசப்பிரகரணம், தத்துவராயர் பாடல் முதலியனவும் வேண்டப்படாமை பெறப்படுகின்றது; இந்திரனுக்குப் பிரகஸ்பதி உபதேசித்த உலகாயதமும் பொய்யாமென்பது,

"புன்றொழிலாகிய பொய்யும் வாய்மையாம் என்றொரு பெரும் பயன் உதவுமாயிடின்" என்று இந்திரபுரிப் படலத்திற் கூறப்பட்டமையினலே பெறப்படுகின்றது. படவே, இவ்விரு சமயங்களும் கந்தபுராணத்தினலே கண்டிக்கப் பட்டமை காண்க."

செந்திநாதையர் அவர்கள் இளமைக் காலத்தில் அக்காலக் கிறிஸ்தவர்களின் சூழ்ச்சிகளால் உலகம் வஞ்சிக்கப் படுதலைக்கண்டு சகிக்காமல், நாவலர் அவர்களைப் போலக் கிறிஸ்துமத கண்டனங்கள் செய்து வந்தார். "சிவனுந் தேவனு என்னுந் தீய நாவுக்கு ஆப்பு" முதலிய நூற்றுக்கணக்கான கண்டனங்கள் ஐயர் அவர்களால் எழுதி வெளியிடப் பட்டன. அறிவு வளர வளர — முதிர முதிர — கிறிஸ்த நெறி

வெறும் புறநோய் – அன்னவிசாரம்; ஏகாத்மவாத நெறி பொல்லாத உள்நோய் – ஆத்ம வருத்தம் – என்பதைச் செந்திநாதையர் நன்கு உணர்ந்தார். தமிழ் நாட்டுக்கும் தாம் பிறந்த ஈழ நாட்டுக்கும் அந்த மகான் அளப்பில்லாத சேவை செய்திருக்கிறார். மாயாவாத மாருதத்தை ஆசமனஞ் செய்வதற்கு ஐயர் ஓர் ஆதிசேஷனாகவே காட்சியளித்தார். தென்னிந்தியாவிலே நல்லசாமிப்பிள்ளை அவர்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்களை ஆங்கிலத்திற் பெயர்த்தற்கும், ஆண்டாளம்மையார் சைவ சித்தாந்த மழை பொழிதற்கும் நமது ஐயர் உறுதுணையாயிருந்தார். வேதாசலம் அவர்களின் குருவாகிய சோமசுந்தர நாயக்கர் அவர்களின் மாயாவாத கண்டன சண்டமாருதத்துக்கும் ஐயர் ஊன்றுகோலா யிருந்தார். இங்கே மாயாவாத துவம்ச கோளரி திரு. நா. கதிரைவேற்பிள்ளையின் கர்ச்சனைகளுக்கும், சுவாமிநாத பண்டிதர் அவர்களின் வீராவேசத்துக்கும், சிவஞானபோத திராவிட மாபாடிய வெளிப்பாட்டிற்கும் மகான் செந்திநாதையரே மூலபுருஷர். இந்த நாட்டிலே இடையிடையே சைவ சித்தாந்த சரபமாகிய ஈசான சிவாசாரியார் அவர்கள் சைவ மழை பொழிந்து வருகின்ருர்கள். இதற்கும் மூலகாரணமாயிருந்தவர் மாகான் செந்திநாதையரே.

மகான் செந்திநாதையரைப் பற்றிச் சமய சம்பந்தமான எத்தனையோ கதைகள் உண்டு. அவைகளை இங்கே குறிப்பிடாமல், அவருடைய புத்திரியாராகிய அம்மையார் ஒருவரைப் பற்றி ஒரு சின்னஞ் சிறு கதை – நான் மாத்திரம் அறிந்த கதை –

அதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அக்கதை, யினல் ஐயர் அவர்களின் கதைகள் எப்படி இருக்கும் என்பதை ஊகிக்கக் கூடியதாயிருக்கும்.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும்" அல்லவா!

பல வருஷங்களுக்கு முன் ஒரு முறை என்னுடன் படிப்பிக்கிறவரும் என் மதிப்புக்குரியவரும் ஆகிய ஓர் ஆசிரியர் செந்திநாதையர் அவர்களின் புத்தகங்களை அவருடைய புத்திரியார் விக்கிரயஞ்செய்கிருராம் என்று கேள்விப்பட்டு அங்கே போனுர். அம்மையார் புத்தகக் குவியல்களைக் காண்பித்தார். ஐயர் அவர்கள் பதிப்பித்த நீலகண்ட பாஷ்யம் முதலிய சில புத்தகங்களையும் அவர்கள் உபயோகித்த வேறுபல புத்தகங்களையும் அந்த ஆசிரியர் எடுத்தார். அவர் எடுத்தவைகளில் 'சூத சங்கிதை'யும் ஒன்று. அம்மையார், "தம்பி உமக்கு அது வேண்டாம்" என்று சொல்லி, அந்தச் சூத சங்கிதையைத் திருப்பி வாங்கிக்கொண்டார். ஆசிரியருக்கு ஏன் அந்த அம்மையாா அப்படிச் செய்கிருர் என்பது புலப்படவில்லை. "ஏன் அப்படிச் செய்கிறீர்கள்; சூதசங்கிதை விக்கிரயஞ் செய்வதில்லையா" என்று ஆசிரியர் கேட்டார். அதற்கு அந்த மகான் பெற்ற அந்த அம்மையார் செப்பிய வார்த்தை இது:

"தம்பீ, சூதசங்கிதையில் ஏகான்ம வாதிகளின் திருவிளையாட்டு நடந்திருக்கிறது. அது உமக்கு வேண்டாம்."

ஆசிரியர் சூதசங்கிதை எடுக்காமலே வந்துவிட்டார். அவர் அந்த அம்மையார் சொன்ன கதையை அப்படியே எனக்குச் சொன்னார். அன்று தொடக்கம் "அது என்ன திருவிளையாடல்" என்று என் மனம் கேட்டுக்கொண்டே இருந்தது. வருஷங்கள் பல கழிந்தன.

சமீபத்தில் நண்பர் ஒருவர் செந்திநாதையர் அவர்கள் இயற்றிய "சைவ வேதாந்தம்" என்கின்ற அரிய நூலை எனக்கு உபகரித்தார். அதில் உள்ள விஷய அட்டவணையை முதலில் வாசித்துப் பார்த்தேன். அதில்,

"சூதசங்கிதையின் மாறுபாடு" என்று ஒரு விஷயம் வருகிறது. அது இது:

"ஏகான்ம வாதிகள் பொருட்டு ஏகான்மவாத குரவர் தசோபநிடதங்களுக்குச் செய்த ஏகான்ம வாத பாஷ்யத்துக்கு உபப் பிருங்கண மொன்று வேண்டு மெனக் கொண்டு சூதசங்கிதையைப் பதி னெட்டுத் தரம் படித்து அதிற் போந்த பிரஹ்ம கீதையை முற்றும் மாற்றியும், தத்துவ விசாரணைக் குரிய பல சுலோகங்களை அங்கங்கே திரிபுபடுத்தியும், சிவபிரானது அவிநாபாவா சத்தியாராகிய உமையம்மையாரை ஜடசத்தி மோகரூபிணீ என்றும், விஞ்ஞானம் பிரஞ்ஞானம் முதலிய அருட் சத்தியாரது பதினெட்டுத் திருநாமங்களை அந்தக்கரண விருத்திகள் என்றும், சிதம்பர சத்தியாரின் திருநாமங்களாகிய தகராகாய வியோமத்தை அவித்தை, அஞ்ஞானம், அவ்வியாகிருதம், மாயை, ஜடசத்தி என்

றும், சீவான்ம பரமான்மாக்கள் இரண்டையும் உணர்த்தும் இரு மொழிகளையும் க்ஷேத்திரஞ்ஞன் சத்துவம் என்றும், காமியம் என்றதைக் கடாகாய மகாகாயம் போல்வதோர் ஐக்கியம் என்றும், அத்துவாவைச் சம்சார கதியென்றும் தமது ஏகான்மவாத உபநிடதங்களுக் கியையக் கற்பித்துப் புகட்டியிருக்கின்ருர்."

சூதசங்கிதையைப் பற்றிய இக் குறிப்பை வாசித்ததும, பல வருஷங்களுக்கு முன் ஆசிரியர் ஒருவர் சூதசங்கிதையைக் கேட்டதும், செந்திநாதையரின் புத்திரியார் அதை விக்கிரயஞ் செய்ய மறுத்ததும், அவ்வளவோ டமையாமல் அந்த அம்மையார் சூதசங்கிதை பற்றிக் கூறிய கூற்றுக்களும் என் மனக்கணமுன் தோன்றின; உரோமம் புளகித்தது.

ஏகாத்மவாதக் கொள்கைகளைக் கூறும் நூல்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகள் அக் கொள்கைகளைப் பரப்பட்டும். ஆனல், அந்தக் கொள்கை ஒரு சூதசங்கிதை மூலம் பரவுவதை அந்தப் பெண்மணியால் சகிக்க முடியவில்லை. பழைய புத்தகங்களை விக்கிரயஞ் செய்ய முன்வந்த அந்த அம்மையார் அந்தச் சூதசங்கிதையை மாத்திரம் விக்கிரயஞ் செய்ய மறுக்கின்ருர். அதனல் வரும ஊதிபத்தால் அநித்தியமான இந்த உடலை யோம்ப அந்த மாதரசி விரும்பவில்லை. இந்தச் சம்பவம் ஒன்றுமே யாழ்ப்பாணத்தில் கந்தபுராணம் பேசிய சைவ சித்தாந்த கலாசாரம் எவ்வளவு தூரம் ஊறியிருந்த தென்பதற்குப் போதுமானது.

புதிது புதிதாகத் தோன்றி மறையுங் கலாசாசாரங்கள் யாழ்ப்பாணத்தையும் எட்டிப் பார்ப்பது உண்டு ; வழக்கமாகக் கொழும்புக்கு வந்து, பிறகு யாழ்ப்பாணம் வரும். ஆனால், தாமரையிலையில் நீர் போல உருண்டு புரண்டு ஓடிவிடும் ; நிலைப்பதில்லை.

சிலப்பதிகாரத்திற் பேசப்படும் கண்ணகித் தெய்வம் சிங்கள மன்னன் ஒருவனால் இங்கும் வந்து சேர்ந்தது. எல்லா முதன்மை அநுக்கிரகமும் படைத்த விநாயகர் சுப்பிரமணியரைக் குலதெய்வமாகக் கொள்ளுகின்ற இந்த நாட்டிலே அந்தக் கண்ணகிக்குக் கொடுத்த தெய்வ வரிசை இது:

“சைவசமயிகள் என்று பெயர் இட்டுக்கொண்டு அநேக மூடர்கள் உயிர்ப்பலி ஏற்கிற துட்ட தேவதைகளையும் காடன், மாடன், சுடலைமாடன், காட்டேறி, மதுரைவீரன், கறுப்பன், பதினெட்டாம்படிக் கறுப்பன், சங்கிலிக் கறுப்பன், பெரிய தம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சி முதலானவர்களையும் வணங்குகிறார்கள். இந்தியாவிலே அநேக மூடர்கள் முகமதியருடைய பள்ளிவாயிலைச் சேவிக்கிறார்கள். இலங்கையில் அநேக மூடர்கள் உரோமன் கத்தோலிக்கருடைய மரியை கோவிலுக்குக் காணிக்கை செலுத்துகிறார்கள். இவர்கள் எல்லோருஞ் சிவத்துரோகிகள் ; இவர்களே அஞ்ஞானிகள்.”

இந்த வரிசை அமைத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்.

உட்பகை புறப்பகைகளை யெல்லாங் களைந்து, அவற்றை ஒதுக்குக் குடியிருக்கச் செய்து, சுத்த அத்வைத சைவசித்தாந்தத்தை நிலை நாட்டிய கந்த

புராண கலாசார ஊற்று இன்னும் இந்த நாட்டில் ஊறிப் பெருகி வளஞ் செய்யுமா? என்று வினவி ஞல், விடையின்றித் தலை குனிகிற காலம் வந்து விட்டது. வெள்ளையர்கள் வேரில் வெந்நீர் ஊற்று கிறவர்கள்; முதலில் திண்ணைப் பள்ளிகளை ஒடுக்க வழிகண்டார்கள். சிறுவர்களின் கல்வி அவர்கள் வசப்பட்டது. ஆலயங்களில் புராணப் படிப்புக்கள் மெல்ல மெல்ல ஓய்ந்தன. வாழ்க்கை மாறுபட்டது. கலாசாரம் காலம் ஆகிறது.

இப்பொழுதைய ஆண்மணிகளுக்குச் செந்திநா தையர் என்றொருவர் இருந்தார் என்ருல் திகைப் பார்கள்; அப்படி ஒருவரை அறிய அவசியமில்லை. ஆண்மணிகளின் நிலை இதுவாஞல் பெண்மணிக ளின் நிலையைப் பேசுவது வெட்கம்! வருஞ் சந்ததி யாரின் நாடி நரம்புகளில் புராணேதிகாச இரத்தத் துக்கு இடமில்லை. ஓர் உத்தம ஆத்மா கரு இருப் பதற்கு ஏற்ற ஓர் உதரம் இனி இங்கு இல்லை. ஒரு புனித ஆத்மா உடம்பெடுக்க நேர்ந்தால் எப்ப டிப் பட்ட தந்தை தாயர்களை அது நாடும்? அப்படிப் பட்ட தந்தை தாய் ஆகக்கூடியவர்கள் நம் சமூகத் தில் உண்டா? ஔவையாரிலும் திருவள்ளுவரிலும் பாரதத்திலும இராமாயணத்திலும் முழுகித் திளைத் துத், திருமுறைகளும் சிவபுராணங்களும் பயிலும் ஆண்களையும் பெண்களையும் நாம் ஆக்கி வைத்தி ருக்க வேண்டாவா? உலகம் உய்ய ஓர் ஆத்மா கீழ் இறங்குவ தெப்படி? இதை நமது நாடும் தலை வர்களும் சிந்திக்கும் நாள் எந்த நாளோ?

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் திருவடி வாழ்க.

கிடைக்குமிடம் :-

சண்முகநாதன் புத்தகசாலை,
257, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரபல புத்தக வியாபாரிகளிடமும்
பெற்றுக்கொள்ளலாம்.